හානිපූරණය සඳහා වන කාර්යාලය - ශ්‍රී ලංකාව
இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை
Office for Reparations - Sri Lanka



# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# ANNUAL REPORT

# 2024

# இழப்பீடுகளுக்கான அலுவலகம்,
# இலங்கை
# வருடாந்த அறிக்கை 2024

இல.40, புத்கமுவ வீதி, ராஜகிரிய.

## தொலைநோக்கு

''நியாயமான மற்றும் மாற்றத்தக்க இழப்பீடுகளினூடாகத் தேசிய நல்லிணக்கத்தினை வலுப்படுத்துதல்''

## ஆணை

"எதிர்கால சந்ததியினர் உள்ளடங்கலான அனைத்து இலங்கையர்களினதும் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்பினை உறுதி செய்வதற்கான நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான விரிவான இழப்பீட்டுத் திட்டத்தினை வடிவமைத்துச் செயற்படுத்துதல்"

# உள்ளடக்கம்


தலைவரிடமிருந்து, திருமதி, தாரா விஜயதிலக்க, சட்டத்தரணி. ........ 71

உறுப்பினர் சபையிடமிருந்து ........ 73

1. அறிமுகம் ........ 74

2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் ........ 74

3. கொள்கை மற்றும் வழிகாட்டிகள் ........ 75

வழிகாட்டுதல்கள் பின்வருமாறு- ........ 75

4. மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் ........ 76

4.1. வாழ்வாதார உதவித் திட்டம் ........ 76

01. தையற் கனவுகள் - யாழ்ப்பாணம் ........ 76

02. நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் –மட்டக்களப்பு ........ 77

03. வாழ்வின் ஒளி – மட்டக்களப்பு ........ 78

04. நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் – அம்பாறை ........ 79

05. வாழ்வின் ஒளி – அம்பாறை ........ 80

06. பாரம்பரிய உணவு நிலையம் – குறிக்கட்டுவான், வேலணை ........ 81

07. தையற் கனவுகள் – கைதடி, யாழ்ப்பாணம் ........ 82

08. வண்ணமூட்டும் கரங்கள் – யாழ்ப்பாணம் ........ 82

09. தையற் கனவுகள் – கிரான்,மட்டக்களப்பு ........ 83

10. தையற் கனவுகள்– வாழைச்சேனை, மட்டக்களப்பு ........ 84

11. சூரிய மின் படலத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி ........ 84

12. “நெய்தெடுத்த அதிசயங்கள்” சந்தைப்படுத்தல் நிகழ்வு ........ 86

4.2. நிதி சார்ந்த ஆதரவு (நட்டஈடு மற்றும் நிதி உதவி) ........ 86

அ. வட கிழக்கில் இடம்பெற்ற மோதல் ........ 86

ஆ. 2022 இல் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் அரசியல் வன்முறைகள் ........ 87

4.3. உளசமூக ஆதரவு ........ 88

4.4. வட இலங்கையில் மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டுத் தேவைகள் குறித்த வரைபட ஆய்வு. ........ 90

4.5. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் 2019 ........ 91

5. செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் ........ 93

6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ........ 94

7. பொதுக் கணக்காய்வு ........ 94

8. அலுவலகம் ........ 94

9. நிதி முன்னேற்ற அறிக்கையின் சாராம்சம் ........ 95

10. நன்றிகள் ........ 95

## தலைவரிடமிருந்து,

இழப்பீடுகளுக்கான அலுவலகமானது, பொருளாதாரம் மீண்டு எழும் என்கின்ற அதீத நம்பிக்கையுடனும், அலுவலகத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில செயல்பாடுகளை மீட்டெடுக்க முடியும் எனும் நம்பிக்கையுடனும் தனது 2024 ஆம் ஆண்டினை ஆரம்பித்தது. பாதிக்கப்பட்டவர்களின் தற்போதைய மற்றும் மிக அவசரமான தேவைகளைப் புரிந்துகொள்வதாயின் பாதிக்கப்பட்டவர்களுடன் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியமானதொன்று என்பதனை வலியுறுத்தி, தனது அனைத்து நடவடிக்கைகளையும் வடிவமைக்கும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையில் அலுவலகமானது தொடர்ந்து கவனம் செலுத்தியது.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால தனது வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களில் கணிசமான முன்னேற்றத்தினை அடையக்கூடியதாக இருந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வலுவூட்டற் திட்டங்களின் ஊடாக நிகழ்த்தக்கூடியவற்றினை, உதவித் தொகையினை வழங்குவதனூடாக நிகழ்த்த இயலாது எனும் எமது கொள்கையில் நாங்கள் உறுதியாக இருந்தோம். எனவே, திட்டங்களை அடையாளம் காணும் போது, பெண் குடும்பத் தலைவிகளுக்கு அர்த்தமுள்ளதாக அமையக்கூடிய திட்டஙகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இப் பெண்களை வலுவூட்டுகின்றமை, பாரம்பரியமாக சமூகத்தில் ஆழமாக வேரூன்றிக் காணப்படுகின்ற, சமூகத்தினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைதல் என்பவற்றிற்கு எதிரான சமூகக் களங்கத்தினை அவர்கள் சமாளிப்பதற்கு உதவியாக அமையும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி சார் மானியங்களைப் பற்றி நான் விசேடமாகக் குறிப்பிட வேண்டும். நிதி நிவாரணத்தினை வழங்கும் செயற்பாடானது அதனுடன் தொடர்புடைய சவால்களுடன் தொடர்ந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அச் செயற்பாடு நியாயமானதாகவும் மற்றும் நீதியானதாகவும் அமைய வேண்டும் என்ற அதன் கொள்கைகளை அலுவலகம் நிலைநிறுத்த முடிந்தது, அதே வேளையில உண்மையான கோரிக்கைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்படுவதனையும் அலுவலகம் உறுதிசெய்தது.

குறிப்பாக, 2022 வன்முறையின் விளைவாக ஏற்பட்ட இழப்புகள் காரணமாக நிதியினைப் பெறத் தகுதியுடையவர்களை அடையாளம் காண்பதில் பின்பற்றப்பட்ட நெறிமுறை, (அ) முறைப்பாடு செய்யப்பட்ட இழப்பு உண்மையிலேயே சிவில் அல்லது அரசியல் அமைதியின்மையின் விளைவாக நிகழ்ந்ததா என்பதனை உண்மையான ஆதாரங்களின் அடிப்படையில் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கியது, (ஆ) இழப்பின் மதிப்பீடானது வேறு எவரிடமுமன்றி, அரசாங்க மதிப்பீட்டுத் துறையிடமிருந்து மாத்திரமே பெறப்பட்டது, , மற்றும் (இ) சேதமடைந்த/இழந்த சொத்தின் உரிமையாளர் அவரது உரிமையினை நிறுவுகின்ற உண்மையான ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டார். இவ் அணுகுமுறை குறித்த விழிப்புணர்வு, தனது பணியினைக் கையாள்வதில் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது குறித்ததொரு ஒழுக்கத்துடன் செயற்பட்டது என்பதனைத் தெளிவுபடுத்தும். மாறாக, முறைகேடான குற்றச்சாட்டுகளைத் தெளிவுபடுத்துவதில் நாங்கள் ஈடுபடவில்லை.

2019 உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுவெடிப்புத் தாக்குதலைப் பொறுத்தவரை, உயர் நீதிமன்றம் 2023 ஆண்டு ஜனவரி வழங்கிய தீர்ப்பில் 6 பிரதிவாதிகளுக்கும் மொத்தம் ரூபா. 311 மில்லியன் அபராதம் விதித்திருந்தாலும், குறித்த பணத்தில் 88.7% மாத்திரமே 2024 ஆம் ஆண்டில் நிதிக்கு கிடைக்கப்பெற்றது. உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு இணங்க, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது ஒரு சிறப்பு நிதியினை நிறுவி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியினைச செலுத்துவதற்கான திட்டத்தினை வகுத்தது.

2024 ஆம் ஆண்டு முழுவதும், பாதிக்கப்பட்டவர்களின் தற்போதைய குறைகளைக் கண்டறிந்ததன் பின்னர், நிதியிலிருந்து பணமானது வழங்கப்பட்டது. இப் பணி 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிறைவடைந்தது. அனைத்து சந்தர்ப்பங்களிலும், இழ்பீடுகளுக்கான அலுவலகமானது திட்டங்கள், பணம் செலுத்துதல் தொடர்பான கொள்கை நிதிலிருந்து

மேற்கொள்ளப்பட்ட உண்மையான பணக் கொடுப்பனவுகள் குறித்து வெளிப்படைத் தன்மையினைப் பேணியது , மேலும் பாதிக்கப்பட்டவர்களின் தனியுரிமையினை மதிக்கும் அதே வேளையில் அதன் வலைத்தளத்தில் நிகழ்நேரத் தகவல்களையும் பதிவேற்றியது..

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தலைவராக 6 ஆண்டுகள் காலப்பகுதியினை நான் பூர்த்தி செய்யவிருப்பதனால், எனது அனுபவத்தின் அடிப்படையில் குறிப்பிட்டு கூற வேண்டிய ஒரு அம்சத்தினை முன்வைக்க விரும்புகின்றேன். இழப்பீடுகளுக்கான அலுவலகம் என்பது சட்டத்தினால் பொறுப்புகள் ஒதுக்கப்படும் ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும். இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில், முடிவுகளை மேற்கொள்ளும் போது நியாயமான அளவுகோல்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதையும், அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நாம் எடுக்கும் முடிவுகளுக்கு நாமே பொறுப்புக்கூற வேண்டும் என்பதனையும் நாங்கள் எப்போதும் உணர்ந்துள்ளோம். முழுமையான மற்றும் நியாயமான அணுகுமுறைக்குப் பங்களிக்காத தற்காலிகமான முடிவுகளைத் தவிர்க்க வேண்டியது அவசியமாகும், மேலும் அவற்றை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மீது திணிக்கக்கூடாது. நிறுவனம் சுயாதீனமாகச் செயல்படவும் அதன் பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பெறவும் இடமளிக்க வேண்டும்.

தகுதியை மட்டும் மையமாகக் கொண்டு சவாலான முடிவுகளை மேற்கொள்வதில் உறுதியுடன் இருந்து பங்களித்த இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின நான்கு சக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பினைப பயன்படுத்துகிறேன். அவர்களுடன் பணியாற்றுவதனை ஒரு பாக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். என் சார்பாகவும் உறுப்பினர்கள் சார்பாகவும் பணிப்பாளர் நாயகம், தலைமை நிர்வாக அதிகாரி திருமதி ஜெ.ராஜேஸ் கிருஷ்ணமூர்த்தி தலைமையிலான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின ஊழியர்களுக்கு நன்றி கூறுகிறேன், அவர்கள் அர்ப்பணிப்புடனும், கையாளும் திறனுடனும் பணியாற்றினர். பாதிக்கப்பட்டவர்களின் உணர்ச்சிகள் மற்றும் பதட்டத்தை கையாழ்வதோடு, தங்கள் தொகுதிகளுக்கு சிறந்ததைத் தேடும் அரசியல்வாதிகளையும் கையாள்கிறது. இவ் அர்ப்பணிப்பே இழப்பீட்டுக்கான அலுவலகதின் சமநிலையினைப் பராமரிக்கவும் அதன் பணித் திட்டங்களை தொழில்முறை ரீதியில செயல்படுத்தவும் உதவியது.

**திருமதி. தாரா விஜயதிலக்க,**

**சட்டத்தரணி.**

## உறுப்பினர் சபையிடமிருந்து

2024 ஆம் ஆண்டில், இழப்பீட்டுக்கான அலுவலகமானது, நியாயமான, வெளிப்படையான மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறைகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டினைத் தொடர்ந்தது. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களை மேம்படுத்தும் மற்றும் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் முன்முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்து, அலுவலகமானது, வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினையும் அடைந்துள்ளது.

எமது நிதிசார் நிவாரணத் திட்டங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுத்தப்பட்டன, உண்மையான கோரிக்கைகள் தெளிவான மற்றும் நியாயமான அளவுகோல்களின்படி பூர்த்தி செய்யப்படுகின்றமையும் உறுதி செய்யப்பட்டது.

நாம் முன்னோக்கி நகரும் சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பங்குதாரர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நிலைநிறுத்தி, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சுதந்திரத்தையும் தொழில்முறையையும் பராமரிப்பதற்கு உறுப்பினர்கள் சபையானது அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளாகத் தனது சிறந்த தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மிக்க சேவை என்பவற்றினை எமக்கு வழங்கிய தலைவர் திருமதி தாரா விஜயதிலகவிற்கு உறுப்பினர்கள் சபையானது தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இவ் வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்புகின்றது. நியாயம், பொறுப்புக்கூறல் மற்றும் இரக்கத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அலுவலகத்தின் நோக்கத்தை வலுப்படுத்தியுள்ளது. அத்துடன் எண்ணற்ற பாதிக்கப்பட்டவர்களையும் மீட்சிக்கான பாதையில் இட்டு ஆதரவளித்துள்ளது. பணிப்பாளர் நாயகம் மற்றும் அவரது ஊழியர்களின் கடின உழைப்பு மற்றும் முயற்சிகளுக்கு உறுப்பினர்கள் சபையானது நன்றயினைத் தெரிவிக்கிறது

உறுப்பினர்கள்,

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

## 1. அறிமுகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR) என்பது 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும், இவ் அலுவலகமானது 2018 அக்டோபர் 22 ஆம் திகதி நடைமுறைக்கு வந்ததுடன் அதன் உறுப்பினர்களின் நியமனத்தின் பின்னர், 1 ஏப்ரல், 2018 ஆம் திகதியிலிருந்து செயற்பாட்டிற்கு வந்தது.

சட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய இழப்பீடுகளுக்கான அலுவலத்தின் முக்கிய நோக்கங்களாவன:-

1. பாதிக்கப்பட்ட நபர்களுக்கான தனிநபர் மற்றும் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதற்கான இழப்பீடுகள் குறித்த கொள்கைகளை வகுத்து அவற்றை அமைச்சரவைக்குப் பரிந்துரைத்தல்.
2. பொது மக்களுக்கான கல்வி, நினைவுகூருதல் மற்றும் குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள் , பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்கள், குறைபாடுகள் உள்ளவர்கள் ஆகியோருக்கான சிறப்புக் கொள்கைகள் உட்பட, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகள் குறித்த கொள்கைகளை செயல்படுத்துதல் மற்றும் இலகுபடுத்துதல்.
3. நல்லிணக்கத்தை நோக்கமாகக் கொண்ட பிற வழிமுறைகளுடனான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் இணக்கத்தன்மையை உறுதி செய்வதற்கான இணைப்புகளை நிறுவுதல்.
4. தகுதியுள்ள பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்குகின்ற செயற்பாட்டின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

## 2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்

மதிப்பாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் செயல்பட்ட இழப்பீடுகளுக்கான அலுவலக உறுப்பினர்கள் பின்வருமாறு,

1. திருமதி. தாரா விஜேதிலக சட்டத்தரணி - தலைவர், (ஜூன் 12, 2022 -மீள .நியமிக்கப்பட்டார்)
2. கலாநிதி. அசீஸ் முபாரக் - உறுப்பினர் (ஜூலை 6, 2022 – நியமிக்கப்பட்டார்)
3. திரு. ரசிக திஸாநாயக்க சட்டத்தரணி - உறுப்பினர் (ஜூலை 6, 2022 – நியமிக்கப்பட்டார்)
4. திருமதி. பிரியா சிவகணநாதன் சட்டத்தரணி - உறுப்பினர் (ஆகஸ்ட் 5, 2022 – நியமிக்கப்பட்டார்)
5. மேஜர் ஜெனரல் (ஓய்வு) பாலித்த பெர்னாண்டோ - உறுப்பினர் , (ஆகஸ்ட் 12, 2024 – மீள நியமிக்கப்பட்டார்)

சட்டத்தின் பிரிவு 6 இற்கு அமைய, அனைத்து உறுப்பினர்களும் மூன்று (03) ஆண்டு காலப்பகுதிக்கு நியமிக்கப்படுகிறார்கள்.

இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் சராசரியாக ஒவ்வொரு மாதமும் இரண்டு முறை கூடி, இருபது (20) கூட்டங்களை நடாத்தினர். கூட்டங்களுக்கான வருகை சிறப்பாக இருந்தது, மேலும் கூட்டங்களுக்கான உறுப்பினர்களின் ஒட்டுமொத்த வருகை 95% முதல் 100% வரை இருந்தது.

## 3. கொள்கை மற்றும் வழிகாட்டிகள்

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இழப்பீடுகளை வழங்குவதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் பிப்ரவரி 2022 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு மார்ச் 3, 2022 திகதி விஷேட வர்த்தமானி இல. 2269/54 இன் மூலம் வெளியிடப்பட்டன. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு (பாதிக்கப்பட்டவர்களுக்கு) நிவாரணம் வழங்குவதற்கான எட்டு தலையீடுகளின் (08) கருப்பொருள் பகுதிகளையும், நிவாரண நடவடிக்கைகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் பின்பற்ற வேண்டிய பத்து (10) வழிகாட்டுதல்களையும் இக் கொள்கையானது அடையாளம் கண்டுள்ளது.

நிவாரணத்திற்கான குறிப்பிட்ட மானியங்களைத் தீர்மானிப்பதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் தலையீடுகளுக்காக அடையாளம் காணப்பட்ட கருப்பொருள் பகுதிகள் பின்வருமாறு,

1. வாழ்வாதார உதவி
2. நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும் நிதிசார் உதவிகளும்
3. காணி உரிமையினை மீட்டெடுத்தல்
4. வீடமைப்பு வசதியினை வழங்குதல்
5. சமூக உட்கட்டமைப்பின் வசதிகள்
6. நிர்வாகம் சார்ந்த நிவாரணம்
7. உளவியல் ஆதரவு
8. மேம்பட்ட ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீள நிகழாதிருப்பதற்கான நடவடிக்கைகள்.

## வழிகாட்டுதல்கள் பின்வருமாறு-

1. பாதிக்கப்பட்டோரை மையமாகக் கொள்ளல் – பாதிக்கப்பட்ட நபருக்கு எது சிறந்தது என்பதன் அடிப்படையிலேயே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படும்.
2. இன்னலுக்குள்ளான நபர்கள் இழப்பீடுகளைப் பெறுவதற்காக இவர்களுக்கு உரிய தகுதியினைத் தீர்மானிக்கும் அளவுகோல்கள்.
3. இழப்பீடுகளின் வகை மற்றும் பொருத்தமான இடங்களில், தகுதியுள்ள பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளின் தொகை.
4. இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிதிசார்ந்த இழப்பீடுகளை வழங்குவதற்கான தகுதிகள்.
5. இன்னலுக்குள்ளான நபர்களின் அவசர இழப்பீடுகளைப் பெறுவதற்கான தகுதியின் அளவுகோல்கள்.
6. இன்னலுக்குள்ளான நபர்களுக்குப் பல்வேறு வகையான இழப்பீடுகளை வழங்க அல்லது வழங்குவதில் உதவக்கூடிய நிறுவனங்கள்.
7. இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கான அளவுகோல்கள்.
8. நம்பிக்கைத் தன்மையினைச் சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள்.
9. உயிரிழந்தோரை நினைவுகூருவதற்கான மற்றும் நினைவுச் சின்னங்கள் தொடர்பிலான அளவுகோல்கள்.
10. இன்னலுக்குள்ளான நபர்களின் குறிப்பட்ட குழுக்களின் விஷேட தேவைகளை நிவர்த்தி செய்தல்.

## 4. மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்.

பணியாளர் பற்றாக்குறை காரணமாக (கீழே "செயலகம்" என்பதன் கீழ் காண்க), இவ் அலுவலகம் அதன் பணிப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியிருந்ததுடன் இன்னலுக்குள்ளான நபர்களுக்கு ஆதரவளிக்கின்ற அர்த்தமுள்ள மிக அவசரமான தலையீடுகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதொன்றாகக் காணப்பட்டது. அவ்வாறு செயற்பட்டதன் விளைவாக, பிற அரசு நிறுவனங்களால் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்த பகுதிகளின் செயற்பாடுகளை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் பின்பற்றமுடியவில்லை, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முக்கிய கவனமானது பின்வரும் ஆதரவுப் பகுதிகள் மீது இருந்தது –

1.1 வாழ்வாதார உதவி - வள ஆதரவு, அறிவுத்திறன் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் என்பவற்றின் மூலம் இன்னலுக்குள்ளான நபர்களிடையே அவர்களது வருமானத்தினை ஈட்டுவதற்கான திறனை மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பெண்களை வலுவூட்டுவதற்கான முயற்சியில் கவனம் செலுத்தப்பட்டது.

1.2 நிதிசார் நிவாரணம் வழங்குதல்.

1.3 இன்னலுக்குள்ளான நபர்கள் பாதிப்பிலிருந்து மீண்டெழுவதங்கு உதவுவதற்கும் அவர்களது ஒட்டுமொத்த நல்வாழ்விற்கு ஆதரவளிப்பதற்குமான உளவியல் சமூக ஆதரவினை வழங்குதல்.

1.4 வட இலங்கையில் இடம்பெற்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டுத் தேவைகள் குறித்த வரைபட ஆய்வு.

1.5 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 – உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 இன் போது பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான கொடுப்பனவுகள்.

### 4.1. வாழ்வாதார உதவித் திட்டம்

பெண்களின் பொருளாதார சுதந்திரதினை உறுதி செய்யும் முகமாக இழப்பீடுகளுக்கான அலுவலகம் (OR) வாழ்வாதார ஆதரவு திட்டங்களை நடத்தியது. இந் முயற்சியானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இன்னலுக்குள்ளான மற்றும் விளிம்புநிலைப்படுத்தப்பட்ட சமூகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், இழப்பீடுகளுக்கான அலுவலகம் பின்வரும் வாழ்வாதார உதவித் திட்டங்களைச் செயல்படுத்தியது. ஒவ்வொரு பிரதேச செயலகப் பகுதியிலும் இதுபோன்ற ஒரு திட்டத்தினைச் செயல்படுத்துவதனைத் தனது இலக்காகக் கொண்டிருந்தது.

இக் கூட்டு இழப்பீட்டுத் திட்டங்களுக்கான நிதியானது இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவத்தினால (IOM) வழங்கப்படதுடன் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அவற்றினைச் நடைமுறைப்படுத்தியது. பின்வரும் திட்டங்களுக்காக இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனமானது ரூபா. 8.67 மில்லியனை வழங்கியுள்ளது.

### 01. தையற் கனவுகள் - யாழ்ப்பாணம்

இலக்கு குழு மற்றும் திட்டம் - ஆரி சித்திரத் தையல் வேலைப்பாட்டுப் பயிற்சி யாழ்ப்பாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களுக்ககு வழங்கப்பட்டது. இத் திட்டம் இரண்டு கட்டங்களாக நடாத்தப்பட்டது (கட்டம் I , கட்டம் II)

- **இடம்** : சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவு, யாழ்ப்பாணம
- **பயனாளிகள்** : நேரடியாக: 40 இளம் பெண்கள

  : மறைமுகமாக : சண்டிலிப்பாயினைச் சேர்ந்த ஆர்வமுள்ள இளம் பெண்கள
- **செலவினம (ரூபா. மில்லியன்)** : 1.36
- **நடைபெற்ற திகதி** : 26. 02.2024

➢ **வழங்கப்பட்ட உதவி :** - 02 மாதங்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாட்டுப் பயிற்சி மற்றும் பயிற்சிக்கான பொருட்கள் பயிற்சிப் பொருட்கள் மற்றும்
- பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி மையத்திற்கு தையல் இயந்திரங்கள் (6) வழங்கப்பட்டன.

- பயிற்சி காலத்தில் வடிவமைக்கப்பட்ட கைவினைப்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி ஒன்று செப்டம்பர் 13, 2024 அன்று நடைபெற்றது.
- இந்தக் காலகட்டத்தில் பயனாளிகள் மாதத்திற்கு அண்ணளவாக ரூ. 6,000 – 9,000 வரையிலான வருமானத்தினை ஈட்டினர்







## 02. நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் –மட்டக்களப்பு

இலக்கு குழு மற்றும் திட்டம் – கைத்தறிப் பயிற்சியின் மூலம் பெண்களை வலுவூட்டுதல்.

➢ **இடம் :** மண்முனைப்பற்று, மண்முனை தெற்கு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, மட்டக்களப்பு


➢ **பயனாளிகள் :** 89 தனி நபர்களைக் கொண்ட 13 குழுக்கள

➢ **செலவினம் (ரூபா. மில்லியன்) :** 2.42

➢ **நடைபெற்ற திகதி :** 22.03.2024

➢ **வழங்கப்பட்ட உதவி :** - உற்பத்தியினை மீள ஆரம்பிப்பதற்கான நூல் வழங்குதல்.
- இரண்டு warprole இயந்திரங்கள் வழங்குதல்.
- நிதி சார் அறிவிளைப் பெறுவதற்கான பயிற்சி.
- உற்பத்தியில மதிப்புக் கூட்டுதல் மற்றும் உற்பதிதியினைச் செப்பமிடுதல் குறித்த விழிப்புணர்வு.
- மூலப்பொருட்களை வாங்குவதற்கும் பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குமான சந்தைப்படுத்தல் வலையமைப்பினை உருவாக்குதல்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தலையீடானது பயனாளிகளின் மாதாந்திர வருமானத்தினைக் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது, அவர்களது வியாபாரங்கள் மீதான நீண்டகால நம்பகத்தன்மையை மேம்படுத்தியுள்ளது. 2024 ஆம் ஆண்டில் 13 பயனாளிக் குழுக்களின் சராசரி மாதாந்திர வருமான உருவாக்கம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது,











## 03. வாழ்வின் ஒளி – மட்டக்களப்பு

இலக்கு குழு மற்றும் திட்டம் - குடும்பத்தினைத் தலைமை தாங்கும் பெண்கள் - மதிப்புக் கூட்டப்பட்ட மெழுகுதிரி உற்பத்தி மூலம்.

- **இடம் :** மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு
- **பயனாளிகள் :** நேரடியாக: 8 குடும்பங்கள்.(இரண்டு குழுக்கள்)
- **செலவினம் (ரூபா. மில்லியன்) :** 0.85
- **நடைபெற்ற திகதி :** 23.03.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - மூலப்பொருட்கள் மற்றும் மெழுகுவர்த்தி அச்சுகள்.
  - வளவாளர் மூலமான மெழுகுவர்த்தி தயாரிப்பது குறித்த நேரடிப் பயிற்சி.
  - நிதி சார் அறிவூட்டற் பயிற்சி.
  - உற்பத்தியில் பெறுமதி சேர்த்தல் மற்றும் மீன்பிடி தொடர்பான விழிப்புணர்வு.


இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தலையீடானது பயனாளிகளின் சராசரி வருமான உருவாக்கத்தினைக் கணிசமாக அளவு அதிகரித்துள்ளது. பயிற்சியின் மூலம் பெறப்பட்ட நுண்ணறிவின் மூலம் பயனாளிகளினால் புதிய சந்தைகள் இனங்காணப்பட்டுள்ளன.




## 04. நம்பிக்கை தரும் வண்ண நூல்கள் – அம்பாறை

இலக்கு குழு மற்றும் திட்டம் - அம்பாறை மாவட்டத்திலுள்ள இன்னலுக்குள்ளான நபர்கள் - கைத்தறிப் பயிற்சியின் ஊடாக

- **இடம் :** நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவு, அம்பாறை
- **பயனாளிகள் :** 38 தனி நபர்களைக் கொண்ட 03 குழுக்கள
- **செலவினம (ரூபா. மில்லியன்) :** 0.66
- **நடைபெற்ற திகதி :** 15.03.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - உற்பத்தியை மீள ஆரம்பிப்பதற்கான மூலப்பொருட்கள்.
  - நிதி சார் அறிவூட்டற் பயிற்சி.
  - மதிப்புக் கூட்டல, பொதி செய்தல் மற்றும் உற்பத்தியினை நிறைவு செய்தல் குறித்த விழிப்புணர்வு.
  - மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் நிறைவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்குமான சந்தைப்படுத்தல் வலையமைப்பினை உருவாக்குதல்.





இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வழங்கபப்பட்ட உதவிகளுக்குப் பின்னர் மூன்று குழுக்களினதும் சராசரி மாத வருமானம் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

## 05. வாழ்வின் ஒளி – அம்பாறை

இலக்கு குழு மற்றும் திட்டம் - குடும்பத்தினைத் தலைமை தாங்கும் பெண்கள் - மதிப்புக் கூட்டப்பட்ட மெழுகுதிரி உற்பத்தி மூலம்.

- வாழ்வாதார உதவியினை வழங்குவதற்காக குடும்பததினைத தலைமை தாங்கும் ஆறு பெணகளைக கொண்ட புதியதொரு குழு நிறுவப்பட்டது. ஏற்கனவே உதவியினைப் பெற்ற பயனாளிக் குழுக்களுக்கும் மேலதிகமாக பயனாளிகளுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. மதிப்பாய்வு காலத்தில் இரு குழுக்களும் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்திற்கும் அதிகமான தொகையினை ஈட்டினர்.
  - **இடம் :** நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவு, அம்பாறை
  - **பயனாளிகள் :** குடும்பத்தினைத் தலைமை தாங்கும் பெண்கள் (இரண்டு குழுக்கள்)
  - **செலவினம் (ரூபா. மில்லியன்) :** 0.32
  - **நடைபெற்ற திகதி :** 16.03.2024
  - **வழங்கப்பட்ட உதவி :**
    - வளவாளர் ஊடான நேரடிப் பயிற்சி
    - நிதி சார் அறிவூட்டற் பயிற்சி.
    - மூலப்பொருட்கள் மற்றும் மெழுகுவர்த்தி அச்சுகள்.
    - உற்பத்தியில் மதிப்புக்கூட்டல் மற்றும் உற்பதிதியினை செப்பனிடுதல் குறித்த விழிப்புணர்வு.






## 06. பாரம்பரிய உணவு நிலையம் – குறிக்கட்டுவான், வேலணை

இலக்கு குழு மற்றும் திட்டம் - யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் குடும்பத்தினைத் தலைமை தாங்கும் பெண்களின் குழுவினர் பாரம்பரிய உணவுக் கூடமொன்றினை நிறுவத் தீர்மானித்திருந்தனர். இழப்பீடுகளுக்கான அலுவலகமானது வேலணை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குறிகட்டுவானிலுள்ள கட்டடத்தினை இந் நோக்கத்திற்காகப் புதுப்பித்தது. இச் செயற்றிட்டத்திற்கான நிதியினை இடப்பெயர்விற்கான சர்வதேச அமைப்பு IOM வழங்கியது.

- **இடம்** : குறிகட்டுவான், வேலணை பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம்
- **பயனாளிகள்** : நேரடி: 10 இன்னலுக்குள்ளான குடும்பங்கள் (தற்போது 3 உணவு தயாரிப்புக் கூடங்கள் செயற்படுகின்றன)
  மறைமுகமாக: பார்வையாளர்களள் , யாத்திரிகர்கள
- **செலவினம (ரூபா. மில்லியன்)** : 2.4
- **நடைபெற்ற திகதி** : 28.02.2024
- **வழங்கப்பட்ட உதவி** : - கட்டடத்தினைப் புதுப்பித்தல்
  - பயனாளிகளுக்கு நிதி சார் அறிவூட்டற் பயிற்சி.

இந்த நிலையத்தினுள் தற்போது மூன்று உணவு தயாரிப்புக் கூடங்கள் செயற்பட்டு வருகின்றன. இவ் உணவு நிலையமானது யாத்ரீகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் உணவுகளை விற்பனை செய்கிறது, அவர்களுக்கு மலிவு விலையில், சுத்தமான உணவுகளை வழங்குவதுடன் இதுபோன்ற எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரே நிறுவனமாக இது காணப்படுகின்றது. யாத்திரைக் காலத்தில் பயனாளினால் ஒரு நாளைக்கு ரூபா. 5,000 – 10,000 வரையிலான வருமானத்தினை ஈட்ட முடிகிறது.








## 07. தையற் கனவுகள் – கைதடி, யாழ்ப்பாணம்

இலக்கு குழு மற்றும் திட்டம் - யாழ்ப்பாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களுக்கு ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி மூலம் இத் திட்டம் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்டது (கட்டம் I மற்றும் கட்டம் II)

திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் விளைவானது, இலக்குக் குழுக்களான பயனாளிகளின் மாதாந்திர வருமானத்தை அதிகரிப்பதாகும் (27).

- **இடம் :** கைதடி, பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம்
- **பயனாளிகள் :** நேரடி: 27 இளம் பெண்கள்
  மறைமுகமாக : பயனாளிகளின் குடும்பங்கள
- **செலவினம் (ரூபா. மில்லியன்) :** 0.61
- **நடைபெற்ற திகதி :** 13.09.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - வளவாளர் ஊடான 20 நாட்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி.
  - பயிற்சிக்கான பயிற்சிப் பொருட்கள் மற்றும் கருவிகள்.
  - பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி நிலையத்திற்கு (05) தையல் இயந்திரங்கள் வழங்குதல். (கட்டம் II)





## 08. வண்ணமூட்டும் கரங்கள் – யாழ்ப்பாணம்

இலக்கு குழு மற்றும் திட்டம் - யாழ்ப்பாணத்தில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் - அவர்களது தற்போதைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பனை மர கைவினை உற்பத்திக்கான பயிற்சி.

விளைவு: இலக்குக் குழுக்களான, (37) பயனாளிகளின் மாதாந்திர வருமானத்தை அதிகரித்தல்

- **இடம் :** தென்மாராட்சி பிரதேச செயலாளர் பிரிவு, யாழ்ப்பாணம
- **பயனாளிகள் :** நேரடி: 37 பெண்கள்
- **செலவினம் (ரூபா. மில்லியன்) :** 0.46
- **நடைபெற்ற திகதி :** 14.09.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - நிறமூட்டிகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள், பனை உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கான மர அலுமாரிகள் (02).
  - சுளகுகள், கை விசிறி மற்றும் வட்ட தட்டுகள் தயாரித்தல் தொடர்பான மூன்று (03) நாட்களுக்கான பயிற்சி.

- ஊற்பத்திப் பொருட்களுக்கு மதிப்புக் கூட்டுதல், உற்பத்திப் பொருளினைச செப்பனிடுதல மற்றும் நீடித்து உழைக்கும் தன்மை தொடர்பான விழிப்புணர்வு.
- சிறு வாணிப நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு செயல்முறை தொடர்பான விழிப்புணர்வு.






## 09. தையற் கனவுகள் – கிரான்,மட்டக்களப்பு

இலக்கு குழு மற்றும் திட்டம் - மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி . இந் நிகழ்ச்சித் திட்டம் இரண்டு கட்டங்களாக (கட்டம் I & II) என நடாத்தப்பட்டது. பயனாளிகளின் சராசரி மாத வருமானத்தினை அதிகரிப்பதே இதனூடாக எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும்.

- **இடம் :** கிரான் பிரதேச செயலாளர் பிரிவு, மட்டக்களப்பு
- **பயனாளிகள் :** நேரடி: 20 இளம் பெண

  மறைமுகமாக: குறித்த பிரதேசத்திலுள்ள ஆர்வமுள்ள இளம் பெண்கள்
- **செலவினம் (ருபா. மில்லியன்) :** 0.85
- **நடைபெற்ற திகதி :** 19.10.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - வளவாளர் ஊடான 20 நாட்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி.
  - பயிற்சிக்கான பயிற்சிப் பொருட்கள் மற்றும் கருவிகள்.
  - பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி நிலையத்திற்கு (03) தையல் இயந்திரங்கள் வழங்குதல். (கட்டம் I)
  - பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி நிலையத்திற்கு (06) தையல் இயந்திரங்கள் வழங்குதல். (கட்டம் II)

## 10. தையற் கனவுகள் _ வாழைச்சேனை, மட்டக்களப்பு

இலக்கு குழு மற்றும் திட்டம் - மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி . இந் நிகழ்ச்சித் திட்டம் இரண்டு கட்டங்களாக (கட்டம் I & II) என நடாத்தப்பட்டது. பயனாளிகளின் சராசரி மாத வருமானத்தினை அதிகரிப்பதே இதனூடாக எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும்.

- **இடம் :** வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவு, மட்டக்களப்பு
- **பயனாளிகள் :** நேரடி: 20 இளம் பெண்
- **செலவினம (ருபா. மில்லியன்) :** 0.89
- **நடைபெற்ற திகதி :** 19.09.2024
- **வழங்கப்பட்ட உதவி :** - வளவாளர் ஊடான 20 நாட்களுக்கான ஆரி சித்திரத் தையல் வேலைப்பாடு பயிற்சி.
  - பயிற்சிக்கான பயிற்சிப் பொருட்கள் மற்றும் கருவிகள்.
  - பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி நிலையத்திற்கு (03) தையல் இயந்திரங்கள் வழங்குதல். (கட்டம் I)
  - பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பயிற்சி நிலையத்திற்கு (06) தையல் இயந்திரங்கள் வழங்குதல். (கட்டம் II)






## 11. சூரிய மின் படலத்தினை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

இலக்கு குழு மற்றும் திட்டம் - இலங்கை நிலைபேறான எரிசக்தி ஆணைக்குழு (SLSEA), இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிபுணர்கள் மற்றும் SLSEA-வில் பதிவுசெய்யப்பட்ட சூரிய மின்சக்தி சேவையினை வழங்கும்

நிறுவனங்களுடன் இணைந்து, போரினால பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு இரண்டு நாள் திறன் பயிற்சித் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அடிப்படை மின்சார அறிவைக் வழங்கும் முகமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் சூரிய ஒளி மின் பலகை நிறுவல், சிறிய அளவிலான சூரிய மின் நிலைய மேலாண்மை மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தத்துவார்த்த மற்றும் நடைமுறை பயிற்சியை வழங்கியது. பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் , சூரிய மின்சக்தி சேவையினை வழங்கும் நிறுவனங்கள் தங்களது மனிதவளத் தேவைகளின் அடிப்படையில் பகுதிநேர அல்லது முழுநேரமாக அடிப்படையில் பயிற்றப்பட்ட பயனாளிகளை ஆட்சேர்ப்பு செய்தனர. மேலும், பயிற்சி பெற்ற பயனாளிகள் SLSEA இன் தேவைக்கேற்ப பிற மாவட்டங்களில் சூரிய மின்சக்தி சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். மேலும், பயனாளிகள் பயிற்சியினை நிறைவு செய்யும் பட்சத்தில் நிறுவனங்களுடன் பணிபுரிந்த நடைமுறை அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு தேசிய தொழில் தகுதி நிலை 3 ஐப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் பெறுகின்றனர். இந்த நிகழ்ச்சித் திட்டமானது மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டது.






| இடம் | பயனாளிகள் | செலவினம் (ரூ. மில்லியன்) | நடைபெற்ற திகதி | வழங்கப்பட்ட உதவி |
|---|---|---|---|---|
| மன்னார் | 16 | 327,155 | 6 -7 அக்டோபர் 2024 | • வளவாளரினை வழங்குவதனூடாகப் பயிற்சியினை வழங்குதல்.<br>• நடைமுறை ரீதியான அனுபவங்களைப் பெறுவதற்காகன அமர்வுகள் மற்றும் கள விஜயங்களை மின் உற்பத்தி நிலையங்களில ஒழுங்கு செய்தல்.<br>• வேலை வாய்ப்புகளை இனங்காணும் பொருட்டு SLSEA இனையும் பயனாளிகளையும் ஒருங்கிணைத்தல்.<br>• பயனாளிகள் அவர்களது NVQ 3 நிலைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவும் முகமாக பயனாளிகளை PUCSL உடன் ஒருங்கிணைத்தல். |
| வவுனியா | 21 | 310,734 | 16 -17 அக்டோபர் 2024 | |
| மட்டக்களப்பு | 21 | 293,022 | 18 -19 அக்டோபர் 2024 | |
| திருகோணமலை | 52 | 593,756 | 23 - 24 அக்டோபர் 2024 | |

## 12. “நெய்தெடுத்த அதிசயங்கள்” சந்தைப்படுத்தல் நிகழ்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் ” நம்பிக்கை தரும் வண்ண நூல்கள்” - வாழ்வாதாரத் திட்டத்தின் பயனாளிகளுக்கான சந்தைப்படுத்தல் வலையமைப்பை எளிதாக்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது “நெய்தெடுத்த அதிசயங்கள்” எனும் இரண்டு நாள் சந்தை நிகழ்வை ஏற்பாடு செய்து நடத்தியது. யாழ்ப்பாணம், நீர்வேலியைச் சேர்ந்த வாழை நார் கைவினை உற்பத்தியாளர்களும் தங்கள் கைவினைப் பொருட்களுடன் பங்கேற்றனர். இந்த நிகழ்வு 2024 ஜூலை 25 மற்றும் 26 ஆகிய திகதிகளில் இலங்கை மின்சார சபை மற்றும் நீதி அமைச்சு வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பயனாளிகள் ரூ.300,000 ற்கும் அதிகமான வருமானத்தை ஈட்ட முடிந்தது. மேலும் பயனாளிகள் இந் நிகழ்வின் போது மேல் மாகாண வாடிக்கையாளர்களின் விருப்பத் தேர்வு குறித்த அறிவினைத் தாங்களால் பெற முடிந்தமை மிகவும் பெறுமதி மிக்க விடயம் எனக் கருத்து தெரிவித்தனர்.







## 4.2. நிதி சார்ந்த ஆதரவு (நட்டஈடு மற்றும் நிதி உதவி)

2024 ஆம் ஆண்டில், இழப்பீடுகளுக்கான அலுவலகமானது வெளிப்படையான செயல்முறையைப் பின்பற்றி, அதன் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, இன்னலுக்குள்ளான நபர்களுக்குத் தொடர்ந்தும் நிதி சார் நிவாரணத்தினை வழங்கியது. பின்வரும் சம்பவங்கள் தொடர்பாக இழப்பீடுகளுக்கான அலுவலகம் தொடர்ந்து இன்னலுக்குள்ளான நபர்களுக்கு நிவாரணத்தினை வழங்கியது.

அ. வட கிழக்கில் இடம்பெற்ற மோதல்.

ஆ. 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்.

இ. 2022 இல் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் அரசியல் வன்முறைகள.

ஈ. 2005-2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள்.

### அ. வட கிழக்கில் இடம்பெற்ற மோதல்

வடகிழக்கு மோதலினால் ஏற்பட்ட குடும்ப உறுப்பினரின் மரணம், காயம் மற்றும் சொத்துச் சேதம் என்பவற்றின் காரணமாக இன்னலுக்குள்ளான நபர்களுக்கு 2024 ஆம் ஆண்டில் நிதி சார் நிவாரணம் வழங்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில், 7,506 நபர்களுக்கு ரூபா. 933.44 மில்லியன் நிவாரணமாக வழங்கப்பட்டது.

**காணாமலாக்கப்படடோரின் குடும்பங்களுக்கான கொடுப்பனவினை வழங்குதல்**

காணாமலாக்கப்பட்டோரின குடும்பங்களுக்கான நிவாரணமானது காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் (OMP) பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகின்றன. இவ் அலுவலகம், விசாரணையினை நடத்தி, அந்த நபர் உண்மையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளாரா் என்பதற்கான ஆதாரங்கள தொடர்பில் திருப்தி அடையும் பட்சத்தில், உறுதிப்படுத்திய பின்னர், இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குப் பரிந்துரையை வழங்குகிறது. 2022 மற்றும் 2024 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட நபர்களின் பொருட்டு அவர்களது 3,771 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. குடும்ப உறுப்பினரின் இறப்புச் சான்றிதழை வழங்கிய குடும்பங்களுக்கான கொடுப்பனவினைச் செலுத்துவதே இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின கொள்கையாக அமைந்திருந்தது. 2022 முதல் இது காணாமல் ஆககப்படடவர்களின குடும்பங்களின் முறைப்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக காணாமலாக்கப்படடோருக்கான அலுவலகத்தினால் விசாரணைகள் நடத்தப்பட்டதன் பின்னர், அக குடும்பங்களுக்குகான கொடுப்பனவினைச் செலுத்தும் வகையில் மாற்றப்பட்டுள்ளது.

### ஆ. 2022 இல் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரங்கள் மற்றும் அரசியல் வன்முறைகள்.


முதன்மைக் கொள்கைகளுக்கு இணங்க, மே 9, 2022 அன்று வன்முறையின் போது ஏற்பட்ட தீ விபத்து மற்றும் அழிவு காரணமாக வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு, மறுசீரமைப்புப் பணிகளைத் தொடங்குவதற்காக உடனடி இழப்பீடுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தொகை, அரசு மதிப்பீட்டுத் துறையின் மதிப்பீட்டை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. மிகவும் பாதிப்பிற்குள்ளாகக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது, எனவே இழப்பு அல்லது அசையா சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இழப்பீடு வழங்கப்பட்டது. கருவூலத்தால் விடுவிக்கப்பட்ட பணத்தை முடிந்தவரை பெரிய பாதிக்கப்பட்ட குழுவிற்கு விநியோகிக்க முடியும் என்பதற்காக, இழப்பு ரூபா. 1 மில்லியனுக்கும் அதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தால், அத் தொகையின் பகுதியளவு மாத்திரமே செலுத்தப்பட்டது.


இம் முறையில், அவசியமான ஆவணங்களுடன் விண்ணப்பமானது கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில், உதாரணமாக: சொத்தின் உரிமை, உரிமைச் சான்று காப்பீட்டிலிருந்து பணம் பெறப்புடுடள்ளதா என்பதனை உறுதி செய்தல் போன்றவற்றவை உறுதிப்படுத்தப்படும் போது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சில நிவாரணங்களை வழங்க இயலுமாக அமைந்தது. இருப்பினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், 2022 இல் இடம்பெற்ற வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிதிசார் நிவாரணங்களை வழங்கும் சந்தர்ப்பத்தில் இச் செயற்பாடுகளுக்கு இடையிலான சமநிலையினைப் பராமரிக்க இழப்பீடுகளுக்கான அலுவலகமானது பாடுபட்டது.

2024 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதிசார் நிவாரணம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பிரதான வகைப்பாடு/சம்பவம் | உப வகைப்பாடு | பயனாளிகள் | வழங்கப்பட்ட தொகை (ருபா) |
|---|---|---|---|
| வட கிழக்கு மோதல் | காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் (காணாமலாக்கப்பட்ட நபர்) | 3,448 | 689,600,000 |
| | சொத்தழிவு மற்றும் இறப்பு | 7,506 | 933,444,606 |
| | **உப கூட்டுத்தொகை (வட-கிழக்கு)** | **10,954** | **1,623,044,606** |
| **சிவில் கலவரங்கள் (அசையாச் சொத்துக்கள்)** | 2022 மே | 168 | 308,070,717 |
| **சிவில் கலவரங்கள் (அசையும் சொத்துக்கள்)** | 2022 மே | 76 | 64,992,411 |
| **அரசியல் பழிவாங்கல்*** | | 71 | 32,130,791 |
| **உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் (காயம்)** | | 1 | 50,000 |
| **மொத்தம்** | | **11,270** | **2,028,288,525** |

- அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுக்களினால் நிர்ணயிக்கப்பட்டபடி தொகையினைச் செலுத்தும் பணியிலே மாத்திரம் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஈடுபட்டிருந்தது. இழப்பீட்டுக் கோரிக்கைகளுக்கான தகுதியினை மதிப்பீடு செய்து தொகையினைத் தீர்மானிப்பதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகம் பணிக்கப்படவில்லை




| 2024 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதிசார் நிவாரணத்தின் சுருக்கம் | | |
|---|---|---|
| | விடயம் | அளவு |
| 1 | "மீண்டெழும் செலவினங்களுக்கான" மொத்தப் பாதீட்டு ஒதுக்கீடு | ரூபா. 2,593 மில்லியன் |
| 2 | நிதிசார் நிவாரணத்தினை வழங்குவதற்காக, "மீண்டெழும் செலவினங்களுக்கான" பாதீட்டில் உள்வாரியாக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை | ரூபா. 2,483 மில்லியன் |
| 3 | மொத்த மீண்டெழும் செலவினங்களுக்கான பாதீட்டின் சதவீதத்தில் உள்வாரியான ஒதுக்கீடு | 96% |
| 4 | ஜனவரி, 01, 2024 இல் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் நிலுவையிலுள்ள இழப்பீட்டு விண்ணப்பங்கள் | 12,220 |
| 5 | 2024 ஆம் ஆண்டில் நிதி சார் நிவாரணம் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 11,272 |
| 6 | விண்ணப்பதாரிக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை | 2,028 |
| 7 | டிசம்பர் 31, 2024 நிலவரப்படி கொடுப்பனவினைச செலுத்துவதற்கு நிலுவையில் உள்ள கொடுப்பனவுக்காக அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 87 |
| 8 | நிலுவையில் உள்ள கொடுப்பனவுகளைத் தீர்க்க ஆண்டு இறுதிக்குள் தேவைப்படும் தொகை | Rs.17 மில்லியன் |

## 4.3. உளசமூக ஆதரவு

இன்னலுக்குள்ளாள நபர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும் உதவுவதற்காக, இழப்பீட்டு அலுவலகத்தின் உளசமூக ஆதரவு பிரிவு (PSS Unit) 2022 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

- இதற்கமைய, இன்னலுக்குள்ளான நபர்களின் உளவியல் சமூகத் தேவைகளைக் கண்டறிந்து அவர்களின் தேவைகளை அடைய உதவுவதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகம் அரசு உத்தியோகத்தர்களுக்கு சம்பவ முகாமையாளர்களாகப் பயிற்சிகளை வழங்கியுள்ளது.
- இழப்பீடுகளுக்கான அலுவலகம் 2023 இல் கூட்டு இழப்பீடுகளை வழங்குவதற்கான சமூக ஆதரவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது மற்றும் 2024 இல் வடக்கு மற்றும் கிழக்கின் பல திசைகளில் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) நிதி உதவியுடன் நடாத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு

உள சமூக ஆதரவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கூட்டு இழப்பீடுகள்

| | நிகழ்ச்சி / செயற்றிட்டம் | இடம் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவு ரூபா/மில்லியன் |
|---|---|---|---|---|
| 1 | கிளிநொச்சியில் உள்ள தொழிற்பயிற்சி அதிகாரசபைக்குச் சொந்தமானது மாற்றுத்திறனாளிப் பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தின் உணவு அருந்தும் அறையினைப் புதுப்பித்தல்- கட்டம் I, கட்டம் II. | கரைச்சி, கிளிநொச்சி | 60 மாற்றுத் திறனாளிப் பெண்கள் | 5 |
| 2 | அம்பாறை, கலைமகள் வித்தியாலயத்தில் பெண் மாணவர்களுக்கான ஐந்து கழிவறைகளைக் கொண்ட தொகுதியினை நிர்மாணித்தல். | கலைமகள் வித்தியாலயம், அம்பாறை | 181 மாணவிகள் | 2 |
| 3 | 01 கலைமகள் வித்தியாலய மாணவிகளின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக சானிட்டரி நாப்கின்கள் (1,000 தொகுதிகள), குப்பைத் தொட்டிகள் மற்றும் சேமிப்புப் பெட்டிகள் என்பவற்றினை வழங்குதல். | கலைமகள் வித்தியாலயம், அம்பாறை | 181 | 1.3 |
| | 02 கலைமகள் வித்தியாலய மாணவர்களுக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் கல்வி சார் பொருட்களை வழங்குதல் (புகைப்பட நகல் இயந்திரம் 01, உயரம் தாண்டுதல் மெத்தை 01, அலமாரிகள் 05) | | 328 | |
| 4 | வாழைச்சேனையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பயணிக்கும் போது பயனாளிகளுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களைக் குறைக்கும் முகமாக, அவர்கள் பயணிப்பதற்காக முச்சக்கர வண்டி வழங்குதல். | வாழைச்சேனை மட்டக்களப்பு | தற்போதைய 23 வதிவிட மாணவர்கள் | 1 |

2024 ஆம் ஆண்டில் 18 மாவட்டங்களில் 152 இன்னலுக்குள்ளான நபர்களை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சம்ப முகாமையாளர்கள் கையாண்டு ஆதரவினை வழங்கியுள்ளனர். அவர்களின் தேவைகள் பரிந்துரை முறை மூலம் நிவர்த்தி செய்யப்பட்டன.

| இல | மாவட்டம் | பால்நிலை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| 1. | குருணாகல் | 9 | 11 |
| 2. | அம்பாந்தோட்டை | 3 | 2 |
| 3. | மாத்தளை | 0 | 5 |
| 4. | மொனராகலை | 1 | 4 |
| 5. | பொலனறுவை | 1 | 3 |
| 6. | திருகோணமலை | 1 | 8 |
| 7. | கம்பஹா | 3 | 1 |
| 8. | அனுராதபுரம் | 1 | 4 |
| 9. | பதுளை | 2 | 3 |
| 10. | கேகாலை | 3 | 1 |
| 11. | மாத்தறை | 8 | 10 |
| 12. | காலி | 2 | 3 |
| 13. | அம்பாறை | 3 | 17 |
| 14. | மட்டக்களப்பு | 3 | 12 |
| 15. | யாழ்ப்பாணம் | 6 | 9 |
| 16. | வவுனியா | 1 | 4 |
| 17. | நுவரேலியா | 0 | 3 |
| 18. | மன்னார் | 4 | 1 |
| | **மொத்தம்** | **51** | **101** |

## 4.4. வட இலங்கையில் மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டுத் தேவைகள் குறித்த வரைபட ஆய்வு.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் மோதல்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கூட்டுத் தேவைகளை அடையாளம் காண, இழப்பீடுகளுக்கான அலுவலகம் 2024 ஆம் ஆண்டில் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின; (IOM) நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் வரைபட ஆய்வை மேற்கொண்டது. நிதி கட்டுப்பாடுகள் காரணமாக இந்த ஆய்வு மேற்கண்ட மூன்று மாவட்டங்களின் அனைத்து பிரிவுகளுக்குள்ளும மட்டுப்படுத்தப்பட்டது. மோதலின் நேரடி மற்றும் மறைமுக விளைவுகளாக சமூகங்கள் எதிர்கொள்ளும் கூட்டு சவால்கள் மற்றும் தேவைகளை அடையாளம் காண்பதும், தனிப்பட்ட இழப்பீட்டிற்கும் அப்பால் அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருத்தமான, உள்ளடங்கல் தன்மை கொண்ட கூட்டு இழப்பீட்டு நடவடிக்கைகளை அடையாளம் காண்பதும் இந்த ஆய்வின் நோக்கமாகுமாக அமைகிறது. மேலும், இவ் ஆய்வு இழப்பீட்டுப் பொறிமுறையின் மீதான நம்பிக்கையை வலுப்படுத்துவதுடன், பாதிக்கப்பட்ட சமூகங்களின் அர்த்தமுள்ள பங்கேற்பினையும் உறுதி செய்கிறது.

இவ் ஆய்வில், மூன்று மாவட்டங்களில் உள்ள 15 பிரிவுகளைச் சேர்ந்த 1,135 க்கும் மேற்பட்ட நபர்கள் விரிவான ஆலோசனையில் பங்குபற்றினர். அவர்கள் பல்வேறு குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர், இதில் மாற்றுத்திறனாளிகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர், பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்கள், அரச, அரசு சாரா ஆயுதக் குழுக்களின் முன்னாள் போராளிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மோதலுடன் தொடர்புடைய பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிளைத்தோர் ஆகியோர் அடங்குவர்.

இந்த ஆய்வின் மூலம் மூன்று மாவட்டங்களில் ஐந்து முக்கிய தேவைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, அவை வாழ்வாதார உதவி, சுகாதாரம் மற்றும் உளவியல் ஆதரவு, உள்கட்டமைப்பு மேம்பாடு, கல்வி ஆதரவு மற்றும் விளையாட்டு, கலாச்சார நடவடிக்கைகளுக்கான ஆதரவு. இக் கூட்டுத் தேவைகள், சவால்கள் மற்றும் இந்த ஆய்வின் மூலம் அடையாளம் காணப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அண்ணளவாக 250 திட்ட முயற்சிகளின் பட்டியலானது உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இப் பட்டியலானது ஒரு பங்குதாரர் சரிபார்ப்பு திட்டத்தினூடாக ஒக்டோபர் 2025 பரிசீலிக்கப்பட்டு இறுதி அறிக்கையானது வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.5. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் 2019

தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் விண்ணப்பங்களிற்கமைய, ஜனவரி 12, 2023 தேதியிடப்பட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பில் பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க, இழப்பீடுகளுக்கான அலுவலகம், ஏப்ரல் 2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கான நிதியினை நிறுவியது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க, பிரதிவாதிகள் 06 பேர் பாதிக்கப்பட்டோர் நிதிக்கு மொத்தம் ரூபா .311 மில்லியனை வரவு வைத்தனர்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி, பாதிக்கப்பட்டோருக்கான நிதிக்கு நன்கொடை அளிக்குமாறு கொடையாளிகளுக்கு அழைப்பு விடுத்து அறிவிப்புகள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்ட போதிலும், அத்தகைய பணம் எதுவும் பெறப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக நிதியில் காணப்பட்ட மொத்த தொகையும் பிரதிவாதிகளால் செலுத்தப்பட்டதாகும்.

- ***குடும்ப உறுப்பினரின் மரணத்திற்காக அவரது நெருங்கிய உறவினருக்கு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கான நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டது.***)

அ) ஆரம்பத்தில், பாதிக்கப்பட்டோருக்கான நிதியானது குறைவாகக் காணப்பட்டமையினால, உயிரினை இழக்கும்போது போது 18 வயது அல்லது அதற்கு மேல் கொண்டிருந்தோரின் குடும்பங்களுக்கு ரூபா. 175,000/= தொகை வழங்கப்பட்டது, பின்னர், மேலும் நிதி கிடைக்கப்பெற்றவுடன், உயிரினை இழக்கும்போது 18 வயதுக்குட்பட்டிருந்தோரின் குடும்பங்களுக்கு ரூபா. 75,000/= தொகை வழங்கப்பட்டது. இத் தொகையானது நெருங்கிய உறவினர்களிடையே பிரிக்கப்பட்டது.

ஆ) பின்னர், பாதிக்கப்பட்டோருக்கான நிதிக்கு அதிகளவான நிதி பெறப்பட்டவுடன், உயிரிழந்த நபரின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மேலதிகமாக ரூபா. 250,000/= வழங்கப்பட்டது. இந்தத் தொகை, குறைந்தபட்ச தொகையாக ரூபா. 125,000/= என்ற அடிப்படையில், நெருங்கிய உறவினர்களிடையே பிரிக்கப்பட்டது.

நெருங்கிய உறவினர்கள் மாணவர்களாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய பிரிக்கப்பட்ட பகுதி, இடைநிலைக் கல்வி ஆதரவுத் திட்டத்தில் (SESS) சேர்க்கப்பட்டது, அவர்களது இடைநிலைக் கல்வி ஆதரவுத் திட்ட மானியத்தில் சேர்க்கப்பட்டது.

- ***காயங்களுக்கான மருத்துவ உதவிக்கான கட்டணம் செலுத்தப்பட்டது.***

தொடர்ச்சியாகச் சிகிச்சை தேவைப்படும் சூழ்நிலைகள் தோறும் பட்சத்தில், முன்னர் கொடுப்பனவினைப் பெற்ற காயமடைந்த நபர்களிடம், நிதிசார் நிவாரணத்திற்கான கோரிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு இழப்பீடுகளுக்கான அலுவலகமானது அழைப்பு விடுத்தது.

புதிய மற்றும் தற்போதைய மருத்துவச் சான்றிதழ்களுடன் பெறப்பட்ட விண்ணப்பங்கள், பரிந்துரைகளுக்காக மருத்துவ நிபுணர்கள் குழுவிற்கு வழங்கப்படுகின்றன. இழப்புபீடுகளுக்கான

அலுவலகத்தின் வேண்டுகோளின் பெயரில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால இக் குழு நியமிக்கப்பட்டது.

மேலும் தொழில்முறைப் பரிந்துரைகள் இல்லாமல் வழங்கக்கூடிய நிவாரணம் (உ.ம் கண்ணாடி மற்றும் கேட்கும் கருவிகளுக்கான கோரிக்கைகள்) வழங்கப்பட்டன.

மருத்துவ நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பிப்ரவரி 2025 முதல் காயங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

- ***இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்வித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள்***

1. ஐம்பது (50) மாணவர்கள் இவ் உதவித் திட்டத்திற்காக அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் உயிரிழந்தோரின் குழந்தைகள் அல்லது நிரந்தரமாக முழுமையாக ஊனமுற்றவர்கள் அல்லது காயங்களால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள்,
2. கள வருகைகளுக்குப் பின்னர் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் அடையாளம் காணப்பட்டனர், மேலும் இழப்பீடுகளுக்கான அலுவலகமானது பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களைச் சந்தித்து முன்மொழியப்பட்ட திட்டங்கள் குறித்து கலந்துரையாடியது.
3. கருத்து மற்றும் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில், ஒவ்வொரு மாணவருக்குமான பொருத்தமான திட்டமானது உறுதி செய்யப்பட்டது.
4. ஒவ்வொரு மாணவருக்கும் ரூபா. 250,000/= தொகையை அவர்கள் இடைநிலைப் பாடசாலைக் கல்வியினைப் பூர்த்தி செய்ய அவர்களுக்கு ஆதரவு தேவைப்படும் ஆண்டுகளின் எண்ணிக்கையால் பெருக்குவது என முடிவு செய்யப்பட்டது. சில மாணவர்களது மானியம் தொடர்பில் இறுதி முடிவினை மேற்கொள்ளும் போது விசேட சந்தர்ப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.
5. இழப்பீடுகளுக்கான அலுவலகம் பல வங்கிகளிடமிருந்து வட்டி விகித விபரங்களைப் பெற்று, பொருளாதார ரீதியாக மிகவும் சாதகமான சலுகை குறித்து பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு அறிவுறுத்தியது. ஆத்துடன் விருப்பமான வங்கியைத் தீர்மானிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கியது.

   அனைவரும் ஹட்டன் நஷனல் வங்கி (HNB) முன்மொழியப்பட்ட திட்டத்தைத் தேர்ந்தெடுத்தனர்.
6. மானியத்தின் அளவு மற்றும் பாடசாலை ஆண்டுகளின் கால அளவு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு 3 வகை முதலீட்டுத் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன -

   அ. பாலர் பாடசாலை முதல் 7 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கான திட்டம்
   ஆ. 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான திட்டம்
   இ. 9 ஆம் வகுப்பு முதல் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான திட்டம்.
7. கணக்குகளை நிர்வகிக்கும் பொறுப்பு பெற்றோரிடமோ அல்லது அடையாளம் காணப்பட்ட மூத்தவரிடமோ (பாதுகாவலர்) ஒப்படைக்கப்பட்டது.
8. இந்தத் திட்டங்கள் மாணவர்களின் நலனுக்காகப் பயன்படுத்தும் பொருட்டு மாதாந்தம் பணம் வைப்புச் செய்யப்படுவதனை இத் திட்டமானது உறுதி செய்தது.
9. மாதாந்தம் பணம் வைப்புச்செய்யப்படுதல் அவசியமில்லை என எந்தவொரு பெற்றோராவது தெரிவித்தால், மானியத் தொகை நீண்ட கால முதலீட்டில் (அதாவது 18 வயது வரை) வைப்புச்செய்யப்பட்டது.
10. இழப்பீடுகளுக்கான அலுவலகம், ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் பெற்றோர்/பாதுகாவலர்களுடன் ஒருங்கிணைந்து , ஒவ்வொரு மைனர் குழந்தைக்கும் மைனர் சேமிப்புக் கணககினை ஆரம்பிப்பதற்கும், மாணவரின் பெயரில் நிலையான வைப்புத்தொகையினை ஆரம்பிப்பதற்கும் வசதியினை ஏற்படுத்தியது. 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு மாதாந்த வட்டி அடிப்படையிலும், முதிர்வு வட்டி அடிப்படையிலும் நிலையான வைப்புத்தொகை வழங்கப்பட்டது. குழந்தையின் நலன்களை மையமாகக் கொண்டு அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டன, மேலும்

பெற்றோர்/பாதுகாவலர் இக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக உறுதிமொழியானது பெறப்பட்டது.

***மூன்றாம் நிலை கல்விக்கான ஆதரவு***

விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்ததன் அடிப்படையில் நிதி உதவியானது வழங்கப்பட்டது. மறுஆய்வுக் காலத்தில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் 23.01.2023 மற்றும் 14.10.2024 (மேலே குறிப்பிடப்பட்டுள்ளது) ஆகிய திகதிகளில் தயாரிக்கப்பட்ட விநியோகக் கொள்கையின்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கும் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோரின் நிதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்தத் தொகை: ரூபா. 311 மில்லியன்
நிதியிலிருந்து வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் தொகை: ரூபா. 242.2 மில்லியன்

| | **கொடுப்பனவுத் திட்டங்கள்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா/ மில்லியன்)** | **ஆண்டு** |
|---|---|---|---|---|
| 1 | குடும்ப உறுப்பினரின் உயிரிழப்பு காரணமாக மானியங்கள் வழங்குதல் | 412 | 79.23 | 2023-2024 |
| 2 | காயம் காரணமாக மருத்துவ உதவி வழங்குதல் | 121 | 41.49 | 2023-2024 |
| 3 | இரண்டாம் நிலை பாடசாலைக் கல்விக்கான உதவி | 50 | 107.91 | 2024 |
| 4 | மூன்றாம் நிலைக் கல்விக்கான உதவி | 4 | 3.01 | 2024 |
| 5 | முதிய பெற்றோருக்கான உதவி | ஜனவரி 31, 2025 வரை எந்தவொரு விண்ணப்பமும் பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்படவில்லை. | | |
| 6 | தொழில் முனைவோருக்கான உதவி | | | |

## 5. செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல்

### 5.1 தகவல் மேலாண்மை அமைப்பு (IMS)

தேவையான தரவுத் தளங்களை உள்ளிடுவதற்கு உதவும் வகையில் புதிய அம்சங்களைச் சேர்த்து 2024 ஆம் ஆண்டில் தகவல் மேலாண்மை அமைப்பு (IMS) மேம்படுத்தப்பட்டது. இவ் அமைப்பினை (IMS) பயனர் நட்புத் தன்மை கொண்டதாகவும், தேவைக்கேற்ப அறிக்கைகளை உருவாக்கக் கூடியதாகவும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.2 பணியாளர் திறன் மேம்பாடு

2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஊழியர்களின் பயிற்சித் தேவைகள் அடையாளம் காணப்பட்டன, மேலும் பங்குதாரர்களுடன் (காணாமல் போனவர்களுக்கான அலுவலகம், நீதித்துறை அல்லாத பயிற்சி நிறுவனம்) இணைந்து பயிற்சிகள் நடத்தப் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அபிவிருத்திக்கான பங்காளர்கள் USAID இன் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க (SCORE) திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன், மூலோபாய திட்டமிடல் குறித்து

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின அனைத்து ஊழியர்களுக்கும் ஜுன் 27 முதல் 29, 2024 வரை மூன்று நாட்கள் வதிவிடப் பயிற்சிப் பட்டறையானது நடாத்தப்பட்டது.

## 6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர் டாக்டர் அஜீஸ் எம். முபாரக் தலைமை தாங்கினார். இக் குழு காலாண்டுக் கூட்டங்களை நடத்தியது

## 7. பொதுக் கணக்காய்வு

பொதுக் கணக்காய்வினை கணக்காய்வாளர் நாயகத் திணைக்களமானது மேற்கொண்டது.

## 8. அலுவலகம்

இவ் அலுவலகம பணிபபாளர் நாயகம/தலைமை நிர்வாக அதிகாரியின் தலைமையில் செயல்படுகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில், பின்வருவோர் இப் பதவிகளில் செயல்பட்டனர்,

திருமதி. ஆர்.பி.எஸ் சமன்குமாரி, மேலதிகச் செயலாளர் (தேசிய ஒருங்கிணைப்பு) நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இப் பதவில் செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டார். மேலும் அவர் 3, ஆகஸ்ட்,2023 முதல் 06, பெப்பிரவரி, 2024 வரை இப் பதவியில் செயற்பட்டார்.

திருமதி. ஜெபராஜேஷ் கிருஷ்ணமூர்த்தி 07, பெப்பிரவரி, 2024 இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்

- இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் கணிசமான எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் காணப்பட்டன, மேலும் இது இந்த அலுவலகத்தின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு ஒரு வெளிப்படையான தடையாகவும் அமைகிறது. இருப்பினும், அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல்களின்படி பின்வரும் அதிகாரிகள் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.
- உதவிப் பணிப்பாளர் – 01
- இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர்கள் - 03
- மொழிபெயர்ப்பாளர் - 01
- உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் - 01
- முகாமைத்துவ உதவியாளர்கள் – 03

2024 ஜனவரி முதல் அக்டோபர் வரை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உளசமூக ஆதரவு மற்றும் தரவு நிர்வாகம் ஆகிய துறைகளின் முழுநேரப் பணிக்காக இரண்டு ஆலோசகர்களை இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) வழங்கியது.

அலுவலகத்தின் தற்போதைய பணியாளர் பணிநிலை பின்வருமாறு,

| வகைப்பாடு | அனுமதிக்கப்பட்ட பணிநிலை | தற்போது பணியாற்றுவோர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | |
| பணிப்பாளர் | 1 | 1 | |
| பிரதிப் பணிப்பாளர் | 2 | 2 | |
| உதவிப் பணிப்பாளர் | 2 | 1 | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | |
| உள்ளகக் கணக்.காய்வாளர் | 1 | - | 1 |
| தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| இழப்பீடுகளுக்கான உத்தியோகத்தர் | 22 | 11 | 11 |
| மொழிபெயர்ப்பாளர் | 1 | - | 1 |
| உள்ளகக் கணக்காய்வு உதவியாளர் | 1 | 1 | |
| முகாமைத்துவ உதவியாளர் | 27 | 17 | 10 |
| சாரதி | 7 | 4 | 3 |
| அலுவலக உதவியாளர் | 7 | 6 | 1 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 1 | 1 | |
| மொத்தம் | **75** | **46** | **29** |

## 9. நிதி முன்னேற்ற அறிக்கையின் சாராம்சம்

2024 ஆம் ஆண்டிற்கான கட்டுப்பணமாக இழப்பீடுகளுக்கான அலுவலகம் ரூபா. 2,128,770,000 தொகையைப் பெற்றது.

| விடயம் | ஒதுக்கீடு (ரூபா/மில்லியன்) | பெற்றுக்கொண்ட கட்டுப்பணம் (ரூபா/மில்லியன்) | செலவினம் (ரூபா/மில்லியன்) | பெறப்பட்ட கட்டுநிதியின் விகிதமாகச் செலவு |
|---|---|---|---|---|
| சம்பளம் மற்றும் தனிநபர் ஊதியங்கள் | 52.95 | 52.95 | 52.78 | 99.6 % |
| ஏனைய மீண்டெழுபவை | 40.00 | 40.00 | 42.57 | 100 % |
| நிதிசார் நிவாரணம் | 2,500.00 | 2,032.82 | 2,028.29 | 100% |
| ஏனைய கொள்கை சார் முயற்சிகள் | | | 4.54 | |
| **உப கூட்டுத்தொகை** | **2,588.00** | **2,125.77** | **2,128.18** | 100 % |
| மூலதனம் | 3.00 | 3.00 | 3.00 | 100% |
| **மொத்தம்** | **2,595.95** | **2,128.77** | **2,131.17** | **100%** |

## 10. நன்றிகள்

சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்பு (IOM) மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அபிவிருத்திக்கான பங்காளர்கள USAID இன் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்க (SCORE) திட்டம் என்பவற்றின் ஊடாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பல முக்கிய திட்டங்களுக்கு ஆதரவு நல்கிய ஐக்கிய நாடுகள் சபை அமைப்புக்கு இழப்பீடுகளுக்கான அலுவலகம் தனது பாராட்டுகளைப் பதிவு செய்ய விரும்புகிறது.

# இழப்பீடுகளுக்கான அலுவலகம்

## 2024.12.31ம் திகதிக்கான பொது நிறுவனத்துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

| | குறிப்பு | 2024 ரூபா | 2023 ரூபா மீண்டும் கூறப்பட்டது |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 1 | 1,420,025 | 1,636,170 |
| அனர்த்த கடன் - குறுகிய காலம் | 2 | 1,802,316 | 1,705,559 |
| முதலீடுகள் - குறுகிய காலம் | 3 | 67,500,000 | 88,500,000 |
| ஊழியர்களின் சேமலாப முதலீடு | 4 | 30,402,209 | 27,637,787 |
| முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் | 5 | 3,187,676 | 9,978,545 |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 6 | 94,170,308 | 11,327,291 |
| | | **198,482,534** | **140,785,351** |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | |
| அனர்த்த கடன் | 7 | 6,628,896 | 7,197,688 |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | 8 | 24,832,817 | 32,636,665 |
| முதலீடுகள் - நீண்ட கால | 9 | 54,932,713 | 79,932,713 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 10 | 9,992,521 | 1,408,500 |
| | | **96,386,947** | **121,175,566** |
| **மொத்த சொத்துக்கள்** | | **294,869,481** | **261,960,917** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 11 | 1,862,535 | 3,445,992 |
| ஓய்வுக் கால நன்மைகள் | 12 | 1,335,982 | 862,820 |
| உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பாதிக்கப்பட்டோர் நிதியம் | 13 | 79,241,355 | 2,894,839 |
| | | **82,439,872** | **7,203,651** |
| **நடைமுறையில்லாத பொறுப்புக்கள்** | | | |
| முன்னைய மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 14 | 122,432,713 | 22,566,380 |
| ஓய்வுக் கால நன்மைகள் | 15 | 19,420,002 | 14,471,097 |
| | | **141,852,715** | **37,037,477** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **224,292,587** | **44,241,128** |
| **தேறிய சொத்து** | | **70,576,894** | **217,719,789** |
| **தேறிய சொத்து /பங்கு** | | | |
| மிகை / உரிய காலத்தின் பற்றாக்குறை | | 69,851,498 | 216,994,393 |
| மீள் மதிப்பிட்டு மிகை | | 725,396 | 725,396 |
| **திரட்டப்பட்ட நிதி** | | **70,576,894** | **217,719,789** |

**உறுதிப்படுத்தல்**

2024 டிசம்பர் 31ம் திகதிய நிதிக்கூற்று உண்மை மற்றும் சாதாரண நோக்கில் பெறப்பட்டவை எனவும், 2024 டிசம்பர் 31ம் திகதி வரை நிறுவனத்தின் மிகை/பற்றாக்குறை தொடர்பான நிதிக்கூற்று உண்மை எனவும் நியாயமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

.....................................

**எஸ்.என்.சீ.டபிள்யு.எம்.தர்மகீர்த்தி**
**பிரதிப் பணிப்பாளர் (நிதி)**

.....................................

**ஜெ. கிருஷ்ணமூர்த்தி,**
**பணிப்பாளர் நாயகம்**

இந் நிதிக்கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் சபையால் ஏற்கப்பட்டது மேலும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் கையொப்பமிட்டு இந்நிதிக் கூற்று வழங்கப்பட்டுள்ளது

.....................................

**தாரா விஜயதிலக**
**தலைவி**

.....................................

**கலாநிதி. ஏ.எம்.முபாரக்**
உறுப்பினர்

## இழப்பீடுகளுக்கான அலுவலகம்
## 2024.12.31 இல் முடிவடைந்த வருடத்தின் நிதி செயற்பாட்டு நிலவரம் தொடர்பான விபரம்

| | | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா.<br>மீண்டும் கூறப்பட்டது |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| *செலாவணி அல்லாத பரிவர்த்தனையிலிருந்து கிடைத்த வருமானம்* | | | |
| மீள் நடைமுறை மானியம் | **16** | 2,125,598,995 | 1,405,737,000 |
| | | **2,125,598,995** | **1,405,737,000** |
| **மூலதன மானியம்** | | 13,819,625 | 2,732,634 |
| *பரிமாற்ற பரிவர்த்தனையிலிருந்து கிடைத்த வருமானம்* | | **4,442,080** | **8,798,334** |
| வட்டி | **17** | 4,437,773 | 8,796,934 |
| ஏனைய வருமானம் | **18** | 4,307 | 1,400 |
| **மொத்த வருமானம்** | | **2,143,860,700** | **1,417,267,968** |
| **செயற்பாட்டு முடிவு** | | | |
| **மீண்டெழும் வருமானம்** | | | |
| பரிமாற்றம் அல்லாதது | | 2,125,598,995 | 1,405,737,000 |
| பரிமாற்றம் | | 4,442,080 | 8,798,334 |
| **மொத்தம்** | | **2,130,041,075** | **1,414,535,334** |
| **செலவினம் - தற்போதையது (மூலதனம் அல்லாதது)** | | | |
| ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன் | **19** | (61,795,506) | (49,353,550) |
| கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல் | **20** | (2,032,823,612) | (1,337,276,795) |
| இழப்பீட்டுக்கான ஏனைய செலவுகள் | **21** | (702,762) | (328,096) |
| விநியோகம் மற்றும் கொடுப்பனவுகள் | **22** | (4,416,915) | (3,970,807) |
| நிலையான சொத்துக்களை பராமரித்தல் | **23** | (6,529,866) | (5,716,466) |
| ஏனைய செலவினங்கள் | **24** | (25,846,095) | (24,813,760) |
| நீக்கப்படும் சொத்துக்களின் வருமானத்தில் இலாபம்/பற்றாக்குறை | **25** | (139,945) | (116,083) |
| தேய்மான செலவுகள் | **26** | (10,646,957) | (9,641,762) |
| கடன் தீர நிதி சேர்த்தல் | **27** | (2,235,604) | (418,500) |
| **மொத்த செலவினங்கள்** | | **(2,145,137,262)** | **(1,431,635,819)** |
| **மிகை/உரிய காலத்தின் பற்றாக்குறை** | | **(15,096,188)** | **(17,100,485)** |
| விரிவான வருமானம் 2024ம் ஆண்டிற்கான மறுமதிப்பீட்டு மிகை | | - | 725,396 |
| பரிமாற்றம் அல்லாத வருவாய் - | | | |
| மூலதன மானியம் | | 13,819,625 | 2,732,634 |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் குறைபாடு | | - | - |
| **உரிய காலத்தின் மூலதன மானியத்தை கணக்கிட்ட பிறகு மிகை/(பற்றாக்குறை)** | | **(1,276,563)** | **(13,642,455)** |

## 2024 டிசம்பர் 31ம் முடிவடைந்த ஆண்டிறுதிக்கான நிதி தொடர்பான அறிக்கை

| 2023 (ரூபா.) | குறிப்பு | | 2024 (ரூபா.) |
|---|---|---|---|
| | | **சொத்துக்கள்** | |
| **1,636,170.25** | **1** | **கையிருப்புக்கள்** | **1,420,024.64** |
| 1,592,620.25 | | கையிருப்பு (காகிதாகிகள்) (அட்டவணை -iii) | 1,357,076.64 |
| 43,550.00 | | கையிருப்பு (நலன்புரி) (அட்டவணை -iii) | 62,948.00 |
| **1,705,558.80** | **2** | **ஊழியர் கடன் - குறுகிய காலம்** | **1,802,315.96** |
| 164,922.48 | | சொத்துக் கடன் அட்டவணை i | 124,317.12 |
| 1,498,136.32 | | அனர்த்த கடன் அட்டவணை i | 1,635,498.84 |
| - | | விசேட முற்பணம் அட்டவணை i | - |
| 42,500.00 | | பண்டிகைக் கால முற்பணம் அட்டவணை -i | 42,500.00 |
| **88,500,000.00** | **3** | **குறுகிய காலம் - முதலடு** | **67,500,000.00** |
| | | கடன் வழங்கும் நிறுவனத்திற்கு முற்பணமாக வழங்கப்பட்ட நிதி | |
| | | ஒருங்கிணைந்த உதவித்திட்டத்திற்கு | |
| 88,500,000.00 | | *(விபரத்திற்காக குறிப்பு 13-1 பார்க்கவும்)* | 67,500,000.00 |
| **27,637,786.69** | **4** | **ஊழியர் சேமலாப முதலீடு** | **30,402,208.99** |
| 27,637,786.69 | | ஊழியர் சேமலாப முதலீடு | 30,402,208.99 |
| **9,978,544.65** | **5** | **முற்பண கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள்** | **3,187,675.47** |
| - | | கடன் பெறும் நிறுவனங்களினால் கிடைக்கப்பெற்ற வட்டி | 1,334,882.04 |
| - | | சேமலாப முதலீட்டின் வட்டி | - |
| 9,458,357.46 | | கிடைக்க வேண்டியவை அட்டவணை vi | 1,388,620.47 |
| 495,287.19 | | முன்னைய கொடுப்பனவுகள் அட்டவணை iv | 258,672.96 |
| 19,400.00 | | தொகுக்கப்பட்ட வருமதிகள் அட்டவணை ix | - |
| 5,500.00 | | மீளப்பெறமுடியாத வைப்புக்கள் அட்டவணை v | 205,500.00 |
| **11,327,290.78** | **6** | **காசு மற்றும் காசுக்கு நிகரானவை** | **94,170,308.24** |
| | | அட்டவணை vi | |
| | | இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை | |
| 8,432,451.91 | | கணக்கு இல. 02026495 | 14,928,953.64 |
| | | இலங்கை வங்கி - இராஜகிரிய கிளை | |
| 2,894,838.87 | | கணக்கு இல. 90167960 | 79,241,354.60 |
| **7,197,688.15** | **7** | **ஊழியர்களின் கடன்** | **6,628,895.79** |
| 1,085,689.89 | | சொத்துக் கடன் அட்டவணை i | 861,060.50 |
| 6,094,648.26 | | அனர்த்த கடன் அட்டவணை i | 5,755,035.29 |
| 3,600.00 | | விசேட முற்பணம் அட்டவணை i | 2,800.00 |
| 13,750.00 | | பண்டிகைக் கால முற்பணம் அட்டவணை -i | 10,000.00 |
| **32,636,664.77** | **8** | **சொத்துக்கள், தொழில்கூடம் மற்றும் உபகரணம்கிரயம்** | **24,832,817.38** |
| 48,535,605.57 | | வருட ஆரம்ப மீதி பெறுமதி | 47,915,578.06 |
| 3,185,914.56 | | வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 3,000,444.86 |

| | | |
|---|---|---|
| | **ஜெனல் குறிப்பு இல. 02** | |
| 858,600.00 | அலுவலக கட்டிடத்தை பிரித்து ஒழுங்கு செய்வதற்கான செலவு - இல.40, இராஜகிரிய | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 19** | |
| 2,438,637.50 | கூட்டு.அமைச்சின் நன்கொடைக்கான செலவு 21 வளிப்பதனாக்கிகள் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 22** | |
| 293,996.62 | கூட்டு.அமைச்சின் நன்கொடைக்கான செலவு 18 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபரணங்கள் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 25** | |
| (400,000.00) | கழி. நீக்கப்பட்ட சொத்துக்களின் வளிப்பதனாக்கிகளின் கிரயம் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 26** | |
| (2,286,656.80) | கழி. அலுவலக கட்டிடத்தினை பிரிப்பதற்கான கிரயம் இல.408, நீக்கப்பட்ட சொத்து | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 34** | |
| (5,836,989.39) | கழி. மறுமதிப்பீடு செய்யப்பட்ட கிரயம்/மறுமதிப்பீட்டு தொகை | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 35** | |
| 3,694,500.00 | கூட்டு. மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் தொகை | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 16** | |
| (992,816.00) | கழி. 2023 ஆண்டிற்கான மறுமதிப்பீட்டு தொகை/ நீக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் | (227,408.00) |
| | **ஜெனல் குறிப்பு இல. 40** | |
| (1,575,214.00) | கழி. அடையாளம் காணப்படாத கணணிகள் சொத்துககளை அகற்றுவதற்கான கிரயம்/ மறுமதிப்பீடு செய்யப்பட்ட தொகை | - |
| **47,915,578.06** | | **50,688,614.92** |
| | **தேய்மானம்** | |
| 12,995,290.53 | வருட ஆரம்ப மீதி பெறுமதி | 15,278,913.29 |
| 9,002,702.71 | கூட்டு. வருடத்திற்கான பெறுமதி | 10,646,956.87 |
| | **ஜெனல் குறிப்பு இல. 21** | |
| 609,659.38 | கூட்டு. அமைச்சின் நன்கொடையாக வழங்கப்பட்ட 22 வளிப்பதனாக்கிகளின் தேய்மானம் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 24** | |
| 29,399.66 | கூட்டு. அமைச்சின் நன்கொடையாக வழங்கப்பட்ட 18 தளபாட அலுவலக உபகரணங்களுக்கான தேய்மானம் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 31** | |
| (100,000.00) | கழி. நீக்கப்பட்ட சொத்துக்களின் தேய்மானம் வளிப்பதனாக்கிகள் | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 32** | |
| (1,750,216.98) | கழி. அலுவலக கட்டிடத்தினை பிரிப்பதற்கான தேய்மானம் இல.408, நீக்கப்பட்ட சொத்து | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 37** | |
| (2,867,884.89) | கழி. மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் தேய்மானத்திற்கான ஏற்பாடு | - |
| | **ஜெனல் குறிப்பு இல. 17** | |
| (931,380.92) | கழி நீக்கப்பட்ட சொத்துக்களின் தேய்மானத்திற்கான ஏற்பாடு | (70,072.62) |
| | **ஜெனல் குறிப்பு இல. 41** | |

| | | | |
|---|---|---|---|
| (1,708,656.20) | | கழி. அடையாளம் காணப்படாத கணணிகள் சொத்துககளை அகற்றுவதற்கான தேய்மானம் | - |
| **15,278,913.29** | | வருட இறுதி மீதி பெறுமதி | **25,855,797.54** |
| **32,636,664.77** | | வருட இறுதி மீதி பெறுமதி *(விபரத்திற்காக குறிப்பு 12-1 பார்க்கவும்)* | **24,832,817.38** |
| **79,932,712.63** | **9** | **நீண்டகால முதலீடுகள்** | **54,932,712.63** |
| | | ஒன்றிணைக்கப்பட்ட நிவாரண திட்டத்தின் கீழ் கடன் வழுங்கும் | |
| 79,932,712.63 | | ஒருங்கிணைந்த உதவித்திட்டத்திற்கு *(விபரத்திற்காக குறிப்பு 13-1 பார்க்கவும்)* | 54,932,712.63 |
| **1,408,500.00** | **10** | **தொட்டுணர முடியாத சொத்துக்கள்** | **9,992,520.86** |
| | | **கிரயம்** | |
| 1,827,000.00 | | வருட ஆரம்ப மீதி பெறுமதி | 1,408,500.00 |
| - | | **வருடத்தில் சேர்க்கப்பட்டவை** | 10,819,625.00 |
| | | **பண மதிப்பு நீக்கம்** | |
| | | வருட ஆரம்ப திகதி பெறுமதி | - |
| 418,500.00 | | **கூட்டு. வருடத்திற்கான பெறுமதி** | 2,235,604.14 |
| **418,500.00** | | வருட இறுதி திகதி பெறுமதி | **2,235,604.14** |
| | | **முன்னெடுக்கப்பட்ட பெறுமதி** | |
| 1,408,500.00 | | வருட இறுதி திகதி பெறுமதி *(விபரத்திற்காக குறிப்பு 12-1 பார்க்கவும்)* | 9,992,520.86 |
| **261,960,916.72** | | **மொத்த சொத்து** | **294,869,479.96** |

| **2023 (ருபா.)** | **குறிப்பு** | **பொறுப்புக்கள்** | **2024 (ருபா.)** |
|---|---|---|---|
| **3,445,992.13** | **11** | **பிற செலுத்த வேண்டியவை** | **1,862,535.46** |
| 1,869,769.29 | | தொகுக்கப்பட்ட செலவினம் அட்டவணை viii | 1,147,535.46 |
| 261,222.84 | | வைப்பு கணக்கு | - |
| 1,315,000.00 | | கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடு | 715,000.00 |
| **862,820.00** | **12** | **ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள்** | **1,335,982.50** |
| 862,820.00 | | ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள் - அட்டவணை xi | 1,335,982.50 |
| **2,894,838.87** | **13** | **உயாதத ஞாயறு தாககுதல 2019 பாதிக்கப்பட்டோர் நிதி** | **79,241,354.60** |
| 2,894,838.87 | | **உயாதத ஞாயறு தாககுதல 2019 பாதிக்கப்பட்டோர் நிதி** | 79,241,354.60 |
| **22,566,380.00** | **14** | **பிற பொறுப்புக்களுக்கான ஏற்பாடு** | **122,432,712.63** |
| | | கடன வழங்குவதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி | |
| 22,566,380.00 | | ஒருங்கிணைந்த உதவித்திட்டம் | 122,432,712.63 |
| **14,471,097.00** | **15** | **ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள்** | **19,420,001.50** |
| 14,471,097.00 | | ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள் - அட்டவணை xi | 19,420,001.50 |
| **44,241,128.00** | | **மொத்த பொறுப்புக்கள்** | **224,292,586.69** |
| **217,719,788.72** | | **தேறிய சொத்துக்கள்** | **70,576,893.27** |

## 2024.12.31 ஆண்டிறுதிக்கான சாராம்ச நிதி முன்னேற்ற அறிக்கை தொடர்பான விபரம்

| 2023 (ரூபா.) | குறிப்பு | | 2024 (ரூபா.) |
|---|---|---|---|
| | | **வருமதிகள்** | |
| **1,405,737,000.00** | **16** | **பிற அரச நிறுவனங்களிலிருந்து மாற்றங்கள்** | **2,125,598,994.64** |
| 1,335,500,000.00 | | திறைசேரியின் கட்டுநிதி - நட்டஈடு | 2,032,820,000.00 |
| 40,820,000.00 | | திறைசேரியின் கட்டுநிதி - சம்பளம் | 52,778,994.64 |
| 29,417,000.00 | | திறைசேரியின் கட்டுநிதி - ஏனைய மீண்டெழும் | 40,000,000.00 |
| **8,796,933.55** | **17** | **வட்டி** | **4,437,772.89** |
| | | ***வங்கிச் சேவை கட்டணங்கள் - கடன் வழங்கும் நிறுவனங்கள்*** | |
| 166,438.36 | | இலங்கை வங்கி | - |
| 30,410.95 | | மக்கள் வங்கி | - |
| 42,739.73 | | அரச முதலீட்டு வங்கி முதலீடு | - |
| 1,829,040.14 | | இலங்கை வங்கி புதிய சுயதொழில் கடன் திட்டம் | 567,177.13 |
| 886,993.23 | | இலங்கை வங்கி புதிய வீட்டுக கடன் திட்டம் | 767,704.91 |
| 5,458,577.48 | | சேமலாப முதலீடு - வீட்டு வசதி மேம்பாட்டு நிதி நிறுவன வங்கி | 2,764,422.30 |
| | | ***அலுவலர் சபை கடனுக்கான வட்டி*** | |
| 49,243.95 | | சொத்துக் கடன் | 34,337.13 |
| 329,085.71 | | அனர்த்த கடன் | 301,019.26 |
| 4,404.00 | | விசேட முற்பணம் | 3,112.16 |
| **1,400.00** | **18** | **ஏனைய வருமானம்** | **4,307.00** |
| 1,400.00 | | ஏனைய வருமானம் | 4,307.00 |
| **1,414,535,333.55** | | **மொத்த வருமானம்** | **2,130,041,074.53** |
| | | **செலவினங்கள்** | |
| **49,353,550.07** | **19** | **ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன்** | **61,795,505.71** |
| 23,963,988.82 | | ஊழியர் சம்பளம் | 22,336,035.00 |
| 25,514.88 | | இரண்டாம் நிலை அடிப்படை அதிகாரி கடன் வட்டி | 59,258.77 |
| 3,470,459.09 | | ஊழியர் நனகொடை நிதியம் | 3,613,675.01 |
| 867,614.79 | | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 903,418.76 |
| 932,118.08 | | மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கால கொடுப்பனவு | 2,505,855.44 |
| 1,520,560.46 | | ஏனைய கொடுப்பனவு | 1,377,580.83 |
| 4,744,756.81 | | வாழ்வாதார கொடுப்பனவு | 9,126,546.45 |
| 181,860.84 | | மொழிக் கொடுப்பனவு | 152,892.46 |
| 9,583.33 | | இடைக்கால கொடுப்பனவு | 30,000.00 |
| 18,000.00 | | ஊக்கக் கொடுப்பனவு | 16,500.00 |
| 327,591.39 | | தொழில்சார் கொடுப்பனவு | 595,735.25 |
| 355,806.44 | | வாகனத்திற்கான வாடகை கொடுப்பனவு | 250,000.00 |
| 1,837,401.31 | | எரிபொருள் கொடுப்பனவு | 1,997,560.00 |

| | | | |
|---|---|---|---|
| 1,620,000.00 | | தலைவருக்கான கொடுப்பனவு | 1,620,000.00 |
| 4,320,000.00 | | உறுப்பினா சபை கொடுப்பனவு | 4,108,064.51 |
| 1,200,000.00 | | பயண கொடுப்பனவு | 1,141,129.03 |
| 378,000.00 | | தொலைபேசி கொடுப்பனவு | 363,870.97 |
| 81,670.00 | | விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதிய பங்களிப்புக்கள் | 245,010.00 |
| 2,996,372.33 | | மேலதிக கொடுப்பனவு | 2,711,196.23 |
| 72,000.00 | | கணக்காய்வு குழு அங்கத்தவருக்கான கொடுப்பனவு | 66,000.00 |
| 430,251.50 | | சேமலாப நிதி கொடுப்பனவு | 8,575,177.00 |
| **1,337,276,795.44** | **20** | **கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்** | **2,032,823,612.25** |
| | | ***இறப்பு/காயத்திற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு*** | |
| 450,000.00 | | அரச ஊழியர் | |
| 18,865,000.00 | | சாதாரண பொது மக்கள் | 9,260,000.00 |
| 3,500,000.00 | | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 சித்திரை 2019 | 50,000.00 |
| 1,000,000.00 | | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 சித்திரை 2019 (எஸ்ரோ கணக்கு) பாதிக்கப்பட்டோருக்கான நிதி | - |
| 41,200,000.00 | | காணாமல் போன நபர் (ஓஎம்பி) | 689,600,000.00 |
| | | **கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்** | |
| | | ***பாதிப்படைந்த சொத்துக்கான நட்டஈடு வழங்கல்*** | |
| 14,900,000.00 | | அரச ஊழியர் | 10,763,000.00 |
| 496,809,702.00 | | சாதாரண பொது மக்கள் | 913,421,606.00 |
| 5,815,128.00 | | கண்டிச் சம்பவம் 2018-16/2018 | - |
| 752,739,120.00 | | 2022 சம்பவம் | 373,063,128.00 |
| 127,515.00 | | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னர் நடந்த சம்பவம் 2019 | - |
| 97,690.00 | | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 சித்திரை 2019 | - |
| - | | அரசியல் பழிவாங்கல் - சொத்து | 32,130,791.00 |
| | | **கொள்கைகள் மற்றும் நோக்கங்களை நடைமுறைப்படுத்தல்** | |
| - | | உளவியல் சமூக ஆதரவு | - |
| 1,772,640.44 | | வாழ்வாதார ஆதரவு திட்டம் | 4,535,087.25 |
| **328,096.00** | **21** | ***நட்டஈட்டிற்கான ஏனைய செலவுகள்*** | **702,762.00** |
| 291,981.00 | | சுயதொழில் பயனாளிகளுக்கான பயிற்சி திட்டம் | 561,432.00 |
| 36,115.00 | | நட்டஈட்டு செயற்பாட்டுத் திட்டங்களும், நடமாடும் சேவைகளும் | 141,330.00 |
| **3,970,806.69** | **22** | **விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை** | **4,416,915.16** |
| 1,976,358.69 | | காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 2,519,353.26 |
| 1,937,548.00 | | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 1,849,561.90 |
| 56,900.00 | | சீருடைகள் | 48,000.00 |
| **5,716,465.78** | **23** | **நிலையான சொத்துக்களை பராமரித்தல்** | **6,529,866.07** |

| | | | |
|---|---|---|---|
| 1,198,681.44 | | நிலையான சொத்துக்களை புதுப்பித்தலும் பராமரித்தலும் | 1,423,610.98 |
| 1,606,220.15 | | வாகனங்களை புதுப்பித்தலும் பராமரித்தலும் | 2,293,931.82 |
| 2,911,564.19 | | கட்டிட பராமரிப்புச் செலவினம் | 2,812,323.27 |
| **24,813,760.12** | **24** | **ஏனைய செலவினங்கள்** | **25,846,094.77** |
| 16,000.00 | | பிரயாண செலவினம் - உள்ளூர | 132,155.00 |
| 525,929.08 | | தொலைபேசி கட்டணம் | 623,284.87 |
| 551,550.00 | | தபால் கட்டணம் | 628,985.00 |
| 3,016,974.06 | | மின்சாரம் மற்றும் ஏனைய செலவினம் | 3,285,783.54 |
| 11,563,218.42 | | கட்டிடத்தின் வாடகை | 10,923,417.96 |
| | | **ஏனைய செலவினங்கள்** | |
| 700,000.00 | | கணக்காய்வு கட்டணம் | 777,060.00 |
| 919,615.00 | | அச்சிடல் மற்றும் விளம்பரக் கட்டணம் | 438,783.00 |
| 20,000.00 | | நீதிச் சேவை கட்டணம் - எம்.சீ.இல.5961 | - |
| 1,770,050.88 | | ஊழியர்களுக்கான வைத்தியக் காப்புறுதி | 2,082,519.40 |
| 83,548.32 | | கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஆட்சேர்த்தல் | 912,310.00 |
| 1,722,739.00 | | நலனபுரிச் செலவினம் | 1,939,166.00 |
| 1,135,385.36 | | நானாவிதச் செலவினம் | 916,630.00 |
| 2,788,750.00 | | வாகன குத்தகை வாடகை | 3,186,000.00 |
| **116,082.70** | **25** | **நீக்கப்பட்ட சொத்துக்களின் வருமானம்** | **139,945.38** |
| 116,082.70 | | நீக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனைக்கான இலாபம்/பற்றாக்குறை | 139,945.38 |
| **9,641,761.75** | **26** | **தேய்மானம்** | **10,646,956.87** |
| 857,589.28 | | தேய்மானம் - தளபாடங்கள், அலுவலக உபகரணம் மற்றும் சாதனங்கள் | 858,692.50 |
| 281,464.36 | | இயந்திரங்களுககான தேய்மானம் | 302,833.10 |
| 6,772,500.00 | | வாகனத்திற்கான தேய்மானம் | 6,772,500.00 |
| 61,310.20 | | தொலைபேசிக்கான தேய்மானம் | 56,984.30 |
| 320,452.02 | | அறைகளாக பிரித்தலுக்கான தேய்மானம் | 504,208.53 |
| 738,786.51 | | கணனிகளுக்கான தேய்மானம் | 1,353,665.94 |
| 609,659.38 | | வெப்பத்தினை கட்டுப்படுத்தும் இயந்திரத்திற்கான தேய்மானம் | 798,072.50 |
| **418,500.00** | **27** | **கடன் தீர நிதி சேர்த்தல்** | **2,235,604.14** |
| 418,500.00 | | கணனி தரவுத்தளம் | 2,235,604.14 |
| **1,431,635,818.55** | | **மொத்த மீண்டெழும் செலவு** | **2,145,137,262.35** |
| **(17,100,485.00)** | | **உரிய காலத்தின் மிகை / பற்றாக்குறை** | **(15,096,187.82)** |
| **725,395.50** | | **விரிவான வருமானம் ஆண்டிற்கான மறுமதிப்பீட்டு மிகை** | **-** |
| **2,732,634.00** | | மூலதன மானியம் | **13,819,625.00** |
| **(13,642,455.50)** | | **மூலதன மானியம் கணக்கிடப்பட்ட வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை** | **(1,276,562.82)** |

## இழப்பீடுகளுக்கான அலுவலகம்

## 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் அறிக்கை

| விபரம் | குறிப்பு | 2024 ( ரூபா.) | 2023 ( ரூபா.) மீண்டும் கூறப்பட்டது |
|---|---|---|---|
| **இயங்கிவரும் நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்** | | | |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற கட்டுநிதி | | 2,125,598,995 | 1,405,737,000 |
| உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 பாதிக்கப்பட்டோர் நிதி வருமதிகள் | | 274,174,411 | 36,825,589 |
| உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 பாதிக்கப்பட்டோர் நிதி கொடுப்பனவுகள் | | (197,827,895) | (33,930,750) |
| நானாவித செலவினம் மற்றும் வருமானம் | | 4,200 | 1,400 |
| நீக்கப்பட்ட சொத்துக்களின் வருமானம் | | 36,790 | 628,950 |
| வீட்டு வசதி மற்றும் சமூக மேம்பாட்டிக்கான உட்கட்டமைப்பிற்கான ஆதரவு (IOM) | | 33,781,438 | - |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | அ | (2,153,273,864) | (1,428,578,876) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப் பாய்ச்சல்** | | **82,494,074** | **(19,316,687)** |
| **முதலீட்டு நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்** | | | |
| வட்டி | ஆ | 338,469 | 7,500,588 |
| கடன் மீளப் பெறல் மற்றும் ஏனையவை | இ | 49,158,638 | 72,310,203 |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் | ஈ | (3,000,445) | (4,044,515) |
| முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல் | உ | 46,000,000 | 221,489,000 |
| முதலீடுகள் மற்றும் ஏனையவை | ஊ | (95,147,718) | (314,723,816) |
| **இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப் பாய்ச்சல்** | | **(2,651,057)** | **(17,468,539)** |
| **நிதி நடவடிக்கையின் நிதிச் சுற்றோட்டம்** | | **3,000,000** | - |
| திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியம் | | 3,000,000 | - |
| **நிதி மற்றும் நிதிக்கு நிகரானவை** | | **82,843,017** | **(39,680,064)** |
| **வருட ஆரம்பத்தின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | எ | **11,327,291** | **48,112,516** |
| **வருட இறுதியின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | ஏ | **94,170,308** | **11,327,291** |

**** கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும்.***

### பணம் / நிதி பாய்ச்சல் அறிக்கைக்கான நிதி குறிப்பு

| | 2024 ( ரூபா.) | 2023 ( ரூபா.) |
|---|---|---|
| **அ ஏனைய மீண்டுவரும் செலவினம்** | **(2,153,273,864.06)** | **(1,428,578,875.59)** |
| தனிப்பட்ட ஊதியம் | (56,968,335.81) | (49,055,109.24) |
| பிரயாணம் | (132,955.00) | (15,200.00) |
| வழங்குதல் | (4,181,371.55) | (4,520,438.29) |
| மேற்பார்வை | (6,186,027.59) | (6,099,182.53) |
| ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | (20,728,234.35) | (18,460,675.73) |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | (5,924,578.41) | (4,693,525.36) |
| பிற இழப்பீடுகளை வழங்குதல் | (30,187,803.35) | (9,901,362.44) |
| இறப்பு/காயத்திற்கான நிவாரணம் | (698,910,000.00) | (65,015,000.00) |
| பாதிப்படைந்த சொத்துக்களுக்கான நிவாரணம் | (1,329,378,525.00) | (1,270,489,155.00) |
| நட்டஈட்டிற்கான ஏனைய செலவுகள் | (676,033.00) | (329,227.00) |

| | 2024 ( ரூபா.) | 2023 ( ரூபா.) |
|---|---|---|
| **ஆ வட்டி** | **338,468.55** | **7,500,588.49** |
| 2022ம் ஆண்டிற்கான கடன் வழங்கும் வங்கிச் சேவைக் கட்டணங்கள் | - | 4,162,232.42 |
| 2023ம் ஆண்டிற்கான கடன் வழங்கும் வங்கிச் சேவைக் கட்டணங்கள் | - | 2,955,622.41 |
| **கடன் திட்டங்களிலிருந்து கிடைத்த வட்டி** | | |
| ஊழியர்களின் கடனுக்கான வட்டி | 301,019.26 | 329,085.71 |
| சொத்துக்கள் கடனுக்கான வட்டி | 34,337.13 | 49,243.95 |
| விசேட கொடுப்பனவுகளுக்கான வட்டி | 3,112.16 | 4,404.00 |
| **இ கடன் மீளப் பெறல் மற்றும் ஏனையவை** | **49,158,637.50** | **72,310,203.12** |
| பண்டிகைக் கால முற்பணம் | 303,750.00 | 357,500.00 |
| அனர்த்த கடன் | 2,828,205.31 | 2,663,222.18 |
| சொத்துக் கடன் | 265,234.75 | 164,922.48 |
| விசேட முற்பணம் | 89,200.00 | 127,200.00 |
| உரிமை கோரப்படாத இழப்பீட்டு கணக்கு | - | 8,711,233.00 |
| வைப்பு கணக்கு | 2,245,988.44 | 1,153,828.46 |
| நானாவித முற்பணம் | 3,740,065.00 | 2,765,013.00 |
| பணமாக்கப்படாத காசோலை | 39,686,194.00 | 56,367,284.00 |
| **ஈ நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல்** | **(3,000,444.86)** | **(4,044,514.56)** |
| தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் | (339,281.26) | (83,315.00) |
| தொலைபேசி | - | |
| அலுவலக கட்டிடத்தினை அறைகளாக பிரித்தல் | - | (1,008,417.06) |
| ஆலை மற்றும் இயந்திரங்கள் | (893,377.00) | |
| வெப்பத்தினை கட்டுப்படுத்தும் இயந்திரம் | - | (753,652.50) |
| கணணிகள் | (1,767,786.60) | (2,199,130.00) |
| **உ முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல்** | **46,000,000.00** | **221,489,000.00** |
| **தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை** | **13,000,000.00** | **11,000,000.00** |
| 2024 ஜனவரி 03 | 1,000,000.00 | |
| 2024 பெப்ரவரி 21 | 1,000,000.00 | |
| 2023 பெப்ரவரி 24 | | 1,000,000.00 |
| 2024 மார்ச் 14 | 1,000,000.00 | |
| 2023 மார்ச் 23 | | 1,000,000.00 |
| 2024 ஏப்ரல் 19 | 1,000,000.00 | |
| 2023 மே 19 | | 2,000,000.00 |
| 2024 மே 31 | 1,000,000.00 | |
| 2023 ஜூன் 13 | | 1,000,000.00 |
| 2024 ஜூன் 20 | 1,000,000.00 | |
| 2023 ஜூலை 04 | | 1,000,000.00 |
| 2024 ஜூலை 26 | 1,000,000.00 | |
| 2023 ஆகஸ்ட் 14 | | 1,000,000.00 |
| 2023 செப்டம்பர் 01 | | 1,000,000.00 |
| 2024 செப்டம்பர் 18 | 2,000,000.00 | |
| 2023 ஒக்டோபர் 09 | | 1,000,000.00 |
| 2024 நவம்பர் 05 | 1,000,000.00 | |
| 2024 டிசம்பர் 12 | 2,000,000.00 | |
| 2023 டிசம்பர் 20 | | 2,000,000.00 |
| 2024 டிசம்பர் 30 | 1,000,000.00 | |

| | 2024 ( ரூபா.) | 2023 ( ரூபா.) |
|---|---|---|
| **உ முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல்** | **33,000,000.00** | **210,489,000.00** |
| **இலங்கை வங்கி** | | |
| 2023 பெப்ரவரி 20 - இலங்கை வங்கி - வீடமைப்பு கடன் 1% | | 6,908,000.00 |
| 2023 பெப்ரவரி 20 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1% | | 33,000,000.00 |
| 2023 ஜுலை 06 - இலங்கை வங்கி - வீடமைப்பு கடன் 1% | | 5,581,000.00 |
| 2023 செப்டம்பர் 06 - இலங்கை வங்கி - கைத்தொழில் கடன் 2.5% | | 10,000,000.00 |
| 2024 செப்டம்பர் 26 - இலங்கை வங்கி - வீடமைப்பு கடன் 1% | 28,000,000.00 | - |
| 2023 நவம்பர் 03 இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1% | | 35,000,000.00 |
| 2023 டிசம்பர் 07 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1% | | 100,000,000.00 |
| 2024 டிசம்பர் 18 - இலங்கை வங்கி - வீடமைப்பு கடன் 1% | 5,000,000.00 | |
| **மக்கள் வங்கி** | | |
| 2023 மார்ச் 21 - மக்கள் வங்கி - வீடமைப்பு கடன் 1.5 % | | 10,000,000.00 |
| **அரச ஈட்டு முதலீட்டு வங்கி** | | |
| 2023 ஜுன் 01 - அரச ஈட்டு முதலீட்டு வங்கி - வீடமைப்பு கடன் 2% | | 9,453,888.24 |
| 2023 ஜுன் 22 - அரச ஈட்டு முதலீட்டு வங்கி - வீடமைப்பு கடன் 2% | | 546,111.76 |
| **ஊ** முதலீடுகள் மற்றும் ஏனையவை | **(95,147,718.14)** | **(314,723,815.92)** |
| முதிர்ச்சியடைந்த முதலீடுகளை திறைசேரிக்கு பரிமாற்றல் | **(46,000,000.00)** | **(242,410,000.00)** |
| 2024 பெப்ரவரி 02 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,000,000.00 | |
| 2023 மார்ச் 22 - இலங்கை வங்கி | | 39,908,000.00 |
| 2024 மார்ச் 26 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 2,000,000.00 | |
| 2023 மார்ச் 27 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 1,000,000.00 |
| 2023 மார்ச் 27 - மக்கள் வங்கி | | 10,000,000.00 |
| 2023 ஏப்ரல்12 - இலங்கை வங்கி | | 921,000.00 |
| 2024 மே 05 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,000,000.00 | |
| 2023 மே 29 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 2,000,000.00 |
| 2024 ஜுன்14 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,000,000.00 | |
| முதிர்ச்சியடைந்த முதலீடுகளை திறைசேரிக்கு பரிமாற்றல் | | |
| 2023 ஜுன்15 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 2,000,000.00 |
| 2023 ஜுன் 28 - அரச ஈட்டு முதலீட்டு வங்கி | | 10,000,000.00 |
| 2023 ஜுலை 06 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 1,000,000.00 |

| ஊ முதலீடுகள் மற்றும் ஏனையவை | 2024 ( ரூபா.) | 2023 ( ரூபா.) |
|---|---|---|
| 2023 ஜுலை 17 - இலங்கை வங்கி | | 5,581,000.00 |
| 2024 ஆகஸ்ட் 09- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 2,000,000.00 | |
| 2023 ஆகஸ்ட் 17- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 1,000,000.00 |
| 2023 செப்டம்பர் 14 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 1,000,000.00 |
| 2023 செப்டம்பர் 14 - இலங்கை வங்கி | | 10,000,000.00 |
| 2023 ஒக்டோபர் 09 - இலங்கை வங்கி | | 20,000,000.00 |
| 2023 ஒக்டோபர் 09 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 1,000,000.00 |
| 2024 ஒக்டோபர் 30 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 2,000,000.00 | |
| 2023 நவம்பர் 07 - இலங்கை வங்கி | | 35,000,000.00 |
| 2024 நவம்பர் 07 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,000,000.00 | |
| 2024 நவம்பர் 22 - இலங்கை வங்கி | 28,000,000.00 | |
| 2023 டிசம்பர் 22 - இலங்கை வங்கி | | 100,000,000.00 |
| 2023 டிசம்பர் 29 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | | 2,000,000.00 |
| 2024 டிசம்பர் 30 - இலங்கை வங்கி | 5,000,000.00 | |
| 2024 டிசம்பர் 30 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 3,000,000.00 | |
| ஊ முதலீடுகள் மற்றும் ஏனையவை | **(49,147,718.14)** | **(72,313,815.92)** |
| பண்டிகைக் கால முற்பணம் | (300,000.00) | (350,000.00) |
| அனர்த்த கடன் | (2,625,954.86) | (1,683,232.00) |
| விசேட முற்பணம் | (88,400.00) | (128,000.00) |
| உரிமை கோரப்படாத இழப்பீட்டு கணக்கு | - | (8,711,233.00) |
| நானாவித வைப்பு கணக்கு | (2,507,211.28) | (1,153,828.46) |
| நானாவித முற்பணம் | (3,740,065.00) | (2,883,271.98) |
| திறைசேரியிலிருந்து வேறுபட்ட மானியம் - மூலதனம் | - | (1,036,966.48) |
| திரும்ப பெறக்கூடிய வைப்புக்கள் | (200,000.00) | - |
| பணமாக்கப்படாத காசோலை | (39,686,087.00) | (56,367,284.00) |
| எ **வருட ஆரம்பத்தின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | **11,327,290.78** | **48,112,516.37** |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026495 | 8,432,451.91 | 47,797,232.33 |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல.02026496 | - | 315,284.04 |
| இலங்கை வங்கி - எஸ்குரோ கணக்கு இல. 90167960 | 2,894,838.87 | |
| ஏ **வருட இறுதியின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று** | **94,170,308.24** | **11,327,290.78** |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026495 | 14,928,953.64 | 8,432,451.91 |
| இலங்கை வங்கி - எஸ்குரோ கணக்கு இல. 90167960 | 79,241,354.60 | 2,894,838.87 |

## இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒதுக்கம் மற்றும் பங்கு தொடர்பான கூற்று

### 2023 மற்றும் 2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் தேறிய சொத்து/பங்கு

| | காலப் பகுதிக்கான தேறிய மிகை வருட பற்றாக்குறை | | மீள் மதிப்பீட்டு மிகை | | அரசின் மூலதன மானியம் | | திரட்டப்பட்ட நிதி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 | 2023 | 2024 | 2023 |
| **வருடத்திற்குரிய ஜனவரி 01 இன் மீதி** | **216,994,393** | **232,024,126** | **725,396** | **-** | **-** | **1,036,966** | **217,719,789** | **233,061,092** |
| வருடத்திற்குரிய சீரமைப்பு ஜெனல் குறிப்பு இல. 03 | | (112,900) | | | | | | (112,900) |
| வருடத்திற்குரிய சீரமைப்பு ஜெனல் குறிப்பு இல. 14 | | (300,000) | | | | | | (300,000) |
| வருடத்திற்குரிய - திறைசேரிக்கு மாற்றல் | | | | | | (1,036,966) | | (1,036,966) |
| வருடத்திற்குரிய செலவினம் | (145,866,333) | (248,982) | | | | | (145,866,333) | (248,982) |
| விரிவான வருமானம் - அரசின் மூலதன மானியம் | 13,819,625 | 2,732,634 | | | | | 13,819,625 | 2,732,634 |
| **காலப் பகுதிக்கான தேறிய மிகை/வருட பற்றாக்குறை** | (15,096,188) | (17,100,485) | | 725,396 | | | (15,096,188) | (16,375,089) |
| **வருடத்திற்குரிய டிசம்பர் 31 இன் மீதி** | **69,851,498** | **216,994,393** | **725,396** | **725,396** | **-** | **-** | **70,576,894** | ***217,719,789*** |

## 2024

### நடைமுறையில்லாத சொத்துக்கள்

குறிப்பு இல.12-1 நிதி நிலைக்கு

| | மோட்டார் வாகனம் | தளபாடம் அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் | ஆலை மற்றும் இயந்திரங்கள் | தொலைபேசிகள் | அறைகளாக பிரித்தல் | கணனிகள் | வளிப்பதனாக்கிகள் | கணனி தரவுத்தள நிகழ்ச்சித் திட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *கிரயம்* | | | | | | | | | |
| 2024.01.01 திகதியில் மீதி | 27,090,000.00 | 9,305,040.24 | 822,000.00 | 1,426,200.76 | 1,008,417.06 | 5,071,630.00 | 3,192,290.00 | 1,408,500.00 | 47,915,578.06 |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | | 339,281.26 | 893,377.00 | | | 1,767,786.60 | | 10,819,625.00 | 3,000,444.86 |
| ஜெனல் குறிப்பு 16 | | (2,000.00) | | (1,750.00) | | (223,658.00) | | | (227,408.00) |
| 2024.12.31திகதியில் மீதி | 27,090,000.00 | 9,642,321.50 | 1,715,377.00 | 1,424,450.76 | 1,008,417.06 | 6,615,758.60 | 3,192,290.00 | 12,228,125.00 | 50,688,614.92 |
| *தேய்மானம்* | | | | | | | | | |
| 2024.01.01 திகதியில் மீதி | 6,772,500.00 | 6,514,490.46 | 10,697.26 | 1,012,622.18 | 320,452.02 | 38,491.99 | 609,659.38 | | 15,278,913.29 |
| வருடத்திற்கான கட்டணம் | 6,772,500.00 | 858,692.50 | 302,833.10 | 56,984.30 | 504,208.53 | 1,353,665.94 | 798,072.50 | 2,235,604.14 | 10,646,956.87 |
| ஜெனல் குறிப்பு 17 | | (1,983.06) | | (1,750.00) | | (66,339.56) | | | (70,072.62) |
| 2024.12.31திகதியில் மீதி | 13,545,000.00 | 7,371,199.90 | 313,530.36 | 1,067,856.48 | 824,660.55 | 1,325,818.37 | 1,407,731.88 | 2,235,604.14 | 25,855,797.54 |
| 2024.12.31 திகதியில் தேறிய பெறுமதி | 13,545,000.00 | 2,271,121.60 | 1,401,846.64 | 356,594.28 | 183,756.51 | 5,289,940.23 | 1,784,558.12 | 9,992,520.86 | 24,832,817.38 |

**2024.12.31 திகதியில் முடிவடைந்த ஒருங்கிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு**

**குறிப்பு இல.13-1 நிதி நிலைக்கு**

| நிறுவனம் | பேரேட்டு பக்கம் | வீட்டுக் கடன் | | சுயதொழில் கடன் | | புதிய வீட்டுக் கடன் | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்டகாலம் | குறகிய காலம் | நீண்டகாலம் | குறகிய காலம் | நீண்டகாலம் | குறகிய காலம் | |
| இலங்கை வங்கி | 29 & 31 | - | - | 24,217,712.63 | 32,500,000.00 | 29,000,000.00 | 23,000,000.00 | 108,717,712.63 |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபை | 33 | 1,715,000.00 | 12,000,000.00 | - | - | - | - | 13,715,000.00 |
| **மொத்தம்** | | **1,715,000.00** | **12,000,000.00** | **24,217,712.63** | **32,500,000.00** | **29,000,000.00** | **23,000,000.00** | ***122,432,712.63*** |

**குறிப்பு இல.13-2 நிதி நிலைக்கு**

**2024.12.31 இல் நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வங்கிச்சேவை கட்டணங்கள்**

| நிறுவனம் | பேரேட்டு பக்கம் | மொத்தம் (ருபா) |
|---|---|---|
| இலங்கை வங்கி - வீடமைப்பு | 23 | 767,704.91 |
| இலங்கை வங்கி - சுயதொழில் | 25 | 567,177.13 |
| **மொத்தம்** | | ***1,334,882.04*** |

## கடந்த 06 ஆண்டுகளுக்கான செயல்திறன் மற்றும் நிதி நிலை அம்சங்கள்

| டிசம்பர் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டில் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| **செயற்பாட்டு முடிவுகள்** | | | | | | |
| வருமானம் | 1,540.70 | 983.19 | 397.06 | 459.33 | 480.53 | 1,405.74 |
| மொத்த வருமானம் | 1,566.30 | 1,002.57 | 413.97 | 470.38 | 487.02 | 1,417.27 |
| மொத்த செலவு | 1,553.17 | 1,001.89 | 397.37 | 487.02 | 498.15 | 1,434.64 |
| **நடைமுறையிலுள்ள உபரி / (பற்றாக்குறை) குறித்த காலப்பகுதிக்கான** | 13.13 | 0.68 | 16.59 | (17.11) | (11.48) | (17.10) |
| மூலதன மானியம் | - | - | - | - | 0.35 | 2.73 |
| **மூலதன மானியத்தினைக் கணக்கிட்டதன் பின்னரான உபரி / (பற்றாக்குறை)** | - | - | - | - | 19.27 | (13.64) |
| **சொத்துக்கள்** | | | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | 107.60 | 126.99 | 89.22 | 81.18 | 307.07 | 131.89 |
| நடைமுறையில் அல்லாத சொத்துக்கள் | 894.61 | 881.94 | 763.50 | 522.82 | 212.78 | 127.18 |
| மொத்தச் சொத்துக்கள் | 1,002.21 | 1,008.93 | 852.71 | 604.00 | 519.85 | 259.07 |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2.92 | 7.93 | 6.15 | 12.54 | 2.02 | 4.31 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 755.80 | 756.19 | 620.12 | 377.48 | 284.77 | 37.04 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 758.72 | 764.12 | 626.26 | 390.02 | 286.79 | 41.35 |
| நிகர சொத்துக்கள் | 243.49 | 244.81 | 226.45 | 213.98 | 233.06 | 217.72 |
| **நிகர சொத்துக்கள் / பங்கு** | | | | | | |
| **நிகர சொத்துக்கள் / பங்கு அல்லது திரட்டப்பட்ட உபரி** | 243.49 | 244.81 | 226.45 | 213.98 | 233.06 | 217.72 |

தலைவர்,

இழப்பீடுகளுக்கான அலுவலகம்.

**1. டிசம்பர் 31, 2024 அன்று முடிவடையும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நிதியாண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு அமைவான, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் அடிப்படையிலான கணக்காளர் நாயகத்தின் அறிக்கை.**

**2. நிதிக் கூற்று**

**1.1 தகுதிவாய்ந்த அபிப்பிராயங்கள்.**

டிசம்பர் 31, 2024 அன்றைய நிதி நிலை அறிக்கை, மேற்கூறிய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் அறிக்கை, நிகர சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை, மேற்கூறிய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்க அறிக்கை மற்றும் டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கியல் கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உட்பட நிதி அறிக்கைகளுடன் தொடர்புடைய குறிப்புகளைக் கொண்ட கணக்காய்வானது, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 154(1) இன் படி, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளுடன், எனது வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் பிரிவு 154(6) இன் படி, எனது அறிக்கையானது உரிய நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அலுவலகத்தின் நிதிநிலை அறிக்கைகள் மூலம், டிசம்பர் 31, 2024 இல் உள்ள நிதி நிலை மற்றும் மேற்கண்ட திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் மற்றும் பணப்புழக்கம் ஆகியவை இலங்கை பொதுத்துறைக் கணக்கியற் தரநிலைகளின்படி உண்மையான மற்றும் நியாயமான பார்வையை அளிக்கின்றன என்பது எனது கருத்து.

**1.2 தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படைகள்**

(அ) நிதி நிலை அறிக்கையில், நிறுவனத்தினால் நடப்பு மற்றும் நடப்பு அல்லாத பொறுப்புகள் தனித்தனி வகைப்பாட்டாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்கின்ற போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இல. 01 இன் பந்தி 70 இன் படி, ஒருங்கிணைந்த கடன் மானியத் திட்டத்தின் கீழ் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு, முதிர்ச்சியடைந்த பின்னர் திறைசேரிக்கு மீள அனுப்பப்பட வேண்டிய ரூபா. 122,432,713 ஆனது மொத்தத் தொகை நடப்பு அல்லாத பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வரவிருக்கும் ஆண்டிற்குள் முதிர்ச்சியடையும் ரூபா. 67,500,000 முதலீடுகளை அடையாளம் காணத் தவறியதால், நடப்புப் பொறுப்புகள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன, மேலும் நடப்பு அல்லாத பொறுப்புகள் அவற்றின் உண்மையான தொகைகளுடன் ஒப்பிடும்போது மிகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் இல. 7 இன் பந்தி 65 இன் படி, ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலத்தின் கடைசி திகதியிலும் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள பாவனைக்குகந்த காலம் என்பன மதிப்பாய்விற்குட்படுத்தப்படல் வேண்டும். இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியற் தரநிலைகள் இல. 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள், கணக்கியல் மதிப்பீடுகள் என்பவற்றில் உள்ள வேறுபாடுகள் மற்றும் பிழைகளுக்கு ஏற்ப. எதிர்பார்க்கப்படும் பண்புகள் மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால், அத்தகைய வேறுபாடுகள் கணக்கியல் மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்களாகக் கணக்கிடப்பட வேண்டும், இருப்பினும், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் செலவினமான ரூபா. 823,515 தொடர்பாக இழப்பீடுகளுக்கான அலுவலகம் இந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்கவில்லை, இது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு 2024 ஜனவரி 01 ஆம் திகதி வரை முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டது.

(இ) ஏப்ரல் 28, 2023 முதல் செயற்படுத்தப்பட்ட, ரூபா. 10,819, 625 மதிப்புள்ள கணினி தரவு அமைப்பு நிதிநிலையானது, அறிக்கைகளில் ஒரு சொத்தாக அடையாளம் காணப்படவில்லை. 2023 ஆம் ஆண்டிற்கான ரூபா. 735,141 கடன்தொகை செலவினமாக அடையாளம் காணப்பட்டதால், நடப்பு ஆண்டின் பற்றாக்குறையின் மதிப்பானது அவற்றின் உண்மையான தொகைகளுடன் ஒப்பிடும்போது மிகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) சமுதாய அடிப்படையிலான நுண் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக 2024 ஆம் ஆண்டில் இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினால் (IOM) வழங்கப்பட்ட ரூபா. 20,916,444 தொகையானது, அலுவலகத்தின் தொடர்ச்சியான மானியமாக அடையாளம் காணப்படவில்லை, மேலும் அது IOM இன் நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

(உ) 2024 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான நுண் திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா. 12,787,722 செலவினமானது, நிதி செயல்திறன் அறிக்கையில் செலவினமாக அடையாளம் காணப்படவில்லை.

(ஊ) இலங்கைக் கணக்காய்வுத் தரநிலைகளுக்கு (SLAuS) இணங்க நான் எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். அத் தரநிலைகளின் கீழ் எனக்குரிய பொறுப்புகள், எனது அறிக்கையில் நிதி அறிக்கைகான பிரிவில் கணக்காய்வுக்கான கணக்காய்வாளர்களின் பொறுப்புகளின் கீழ் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுக்கான ஆதாரங்கள் எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்திற்கு அடிப்படையை வழங்கப் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளன என நான் நம்புகிறேன்.

## 1.3. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான் ஆண்டு அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள பிற தகவல்கள்

பிற தகவல்கள் எனக் குறிப்பிடப்படுபவை, நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் தவிர்ந்த, இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கப்பெற்ற, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2024 ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களைக் குறிக்கின்றன.

பிற தகவல்களுக்கான பொறுப்பு நிர்வாகத்திடமே உள்ளது. இப் பிற தகவல்கள் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு உட்பட்டவை அல்ல, மேலும் நான் அவை தொடர்பில் எந்தவிதமான உத்தரவாதத்தையோ அல்லது அபிப்பிராயத்தினையோ தெரிவிக்கவில்லை.

நிதிநிலை அறிக்கைகள் மீதான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய எனது பொறுப்பாக அமைவது, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் பெறப்படும்போது அவற்றைப் படித்து, கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவுக்கு ஏற்ப இது குறிப்பிடத்தக்க அளவில் பொருந்தவில்லையா அல்லது வேறு ஏதேனும் வழிமுறையில் பொருந்தாமல் காணப்படுகின்றதா என்பதனைக் கருத்தில் கொள்வதாகும்.

அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் நான் மேற்கொண்ட நடைமுறைகளின் அடிப்படையில், இத் தகவலகள் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என நான் முடிவு செய்யும் பட்சத்தில், அவ் உண்மையை நான் தெரிவிக்க வேண்டும். கீழே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, பிற தகவல்களில் பின்வரும் குறைபாடுகள் உள்ளன என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) 2021 நவம்பர் 16 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல.01/2021 தொடர்பான வழிகாட்டுதல்களின் தொகுப்பின் பந்தி 3.1 இன் இணைப்பு 03 இன் படி, தலைவரின் பார்வை, அலுவலகத்தின் அறிக்கை மற்றும் சமீபத்திய 10 ஆண்டுகளுக்கான நிறுவனத்தின் நிதி நிலை பற்றிய விபரங்கள் ஆகியன குறைந்தபட்சம் நிதிநிலை அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட முன்வரைவு ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும், இவை சேர்க்கப்படவில்லை.

### 1.4 நிதிநிலை அறிக்கைகளை நிர்வகிப்பதற்கும் வழிநடத்துவதற்கும் உரிய தரப்பினரின் பொறுப்புக்கள்.

இந்த நிதிநிலை அறிக்கைகளை இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியற் தரநிலைகளுக்கு இணங்கத் தயாரிப்பது, அவற்றை நியாயமான முறையில் வழங்குவது மற்றும் மோசடி அல்லது பிழை காரணமாக உருவாகக்கூடிய குறிப்பிடத்தக்க தவறான விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உள் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, தனது செயல்பாடுகளைத் தொடர்வது குறித்து அலுவலகமானது கொண்டுள்ள திறனை மதிப்பிடுவது நிர்வாகத்தின்

பொறுப்பாகும். நிர்வாகம் அலுவலகத்தின் செயல்பாடுகளை நிறுத்த விரும்பினாலோ, அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்றன்கின்ற சந்தர்ப்பத்திலோ, தொடர்ந்து அலுவலகமானது செயற்படும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் கணக்குகளைப் பராமரிப்பதும், தொடர்புடைய தகவல்களை வெளியிடுவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும். அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடும் பொறுப்பு வழிநடத்தும் தரப்பினருக்கு உண்டு.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கைக் கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 16(1) இன் படி, அலுவலகத்தின் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளைத் துல்லியமாகவும் சரியான நேரத்திலும் தயாரிப்பதை எளிதாக்கும் வகையில் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த பதிவுகள் மற்றும் அறிக்கைகள் முறையாகப் பராமரிக்கப்படல் வேண்டும்.

### 1.5 நிதிநிலை அறிக்கைகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கருத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையினை வெளியிடுவதும், நிதிநிலை அறிக்கைகள் ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது பிழைகளினால் எக்கூடிய குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகளிலிருந்து விடுபட்டுள்ளன என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளின்படி நடத்தப்படும் கணக்காய்வானது எல்லா சந்தர்ப்பங்களிலும் குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகளைக் கண்டறியும் என்பதற்கு இது உத்தரவாதமல்ல. தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக நிகழ்த்தப்படும் மோசடி அல்லது பிழை காரணமாகக் குறிப்பிடத்தக்க தவறான கூற்றுகள் எழக்கூடும், மேலும் இவ் நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் பயனாளிகள் மேற்கொள்ளும் பொருளாதார முடிவுகளில் அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைப் பொறுத்தே அவற்றின் முக்கியத்துவம் தீர்மானிக்கப்படுகிறது.

இலங்கைக் கணக்காய்வுத் தரநிலைகளின்படி கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் தொழில்முறைத் தீர்ப்பைப் பயன்படுத்துகிறேன். கணக்காய்வு முழுவதும் தொழில்முறைச் சந்தேகத்தைப் பேணியுள்ளேன். மேலும் நான்:

- நிதிநிலை அறிக்கைகளின் குறிப்பிடத்தக்க தவறான, அறிக்கையிடலின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுதல், அது மோசடி அல்லது பிழை காரணமாக ஏற்பட்டிருக்கலாம், அவ் அபாயங்களுக்கு ஏற்ப கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயல்படுத்துதல், மேலும் எனது கருத்துக்கு அடிப்படையாகப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைத் திரட்டுதல். மோசடியின் விளைவாக ஏற்படும் குறிப்பிடத்தக்க தவறான அறிக்கையைக் கண்டறியாமல் இருப்பதன் விளைவாக ஏற்படும் ஆபத்தானது, பிழையின் காரணமாக ஏற்படும் அபாயத்தை விட அதிகமாகும், ஏனெனில் மோசடி என்பது கூட்டுச்சதி,

மோசடி, வேண்டுமென்றே விடுபடுதல், தவறான விளக்கங்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மீறுதல் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கலாம்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் குறித்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லாமல், சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கும் பொருட்டு கணக்காய்வுக்குப் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுதல்.

- பயன்படுத்தப்படும் கணக்கியற் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும், நிர்வாகததினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் நியாயத்தன்மையையும் மதிப்பிடுதல்.

  • கணக்கியலின் தொடர்ச்சியான நிறுவன அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்துவது பொருத்தமானதா என்பதையும், பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலும், தொடர்ச்சியான நிறுவனமாகத் தொடர்வதற்கான அலுவலகத்தின் திறனில் குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகளுடன் தொடர்புடைய குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மையானது காணப்படுகின்றதா என்பதனையும் முடிவு செய்தல். குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்யுமிடத்து, நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காண்வாளரின் அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும் அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிட்டால், எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எனது முடிவுகள் எனது கணக்காய்வாளரின் அறிக்கையின் திகதி வரை பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டவை. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிபந்தனைகள் அலுவலகமானது தொடர்ந்து செயல்படுவதை நிறுத்தக்கூடும்.

நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த முன்வைப்பானது, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம், வெளிப்படுத்தல்கள் உட்பட, நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படைப் பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை, நியாயமான முன்வைப்பினை அடையும் வகையில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்யவும். இதன் மூலம், எனது கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், முக்கிய உள்ளக நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் பிற விடயங்களை நிர்வாக தரப்பினருக்குத் தெரிவிக்கிறேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த அறிக்கை.

   பின்வரும் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் சிறப்பு விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

2.1 எனது அறிக்கையின் தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படைப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(a) இன் விதிகளின்படி கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன். எனது பரிசோதனையின் அடிப்படையில், அலுவலகம் அதன் நிதி அறிக்கைகளை முறையாகப் பராமரித்து வருகிறது.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(iv) இன் தேவைப்பாடுகளுக்கு இணங்க, அலுவலகத்தின் நிதிநிலை அறிக்கைகள் கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கைகளுடன் ஒத்திசைகின்றன.

1.2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(d)(iv) இன் தேவைகளுக்கு இணங்க, முந்தைய ஆண்டில் நான் செய்த பரிந்துரைகள், வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பண்புரீதியான விடயங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், பின்வரும் அறிக்கைகளைச் மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு என்னைத் தூண்டும் எந்தவொரு விடயமும் என் கவனத்திற்கு வரவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 12(d) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி, அலுவலகத்தைப் பொறுத்தவரை, வழிநடத்தும் தரப்பினரின் எந்தவொரு உறுப்பினரும் வழக்கமான பணிக்கு அப்பால் எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆர்வமாக இருத்தல்.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(e) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின்படி, பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, அலுவலகத்தின் நிர்வாகக் குழுவால் வழங்கப்பட்ட எந்தவொரு தொடர்புடைய எழுதப்பட்ட சட்டம், பிற பொதுவான அல்லது சிறப்பு உத்தரவுகளுக்கும் இணங்காமல் செயல்பட்டுள்ளது:

**சட்டங்கள், விதிகள்/வழிமுறைகள் இணங்காத விடயங்கள் பற்றிய குறிப்பு**

(அ) பந்தி (1) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி செலுத்தப்பட்ட படிவங்களும், அனைத்துப் நடவடிக்கை

| | |
|---|---|
| ஒழுங்குமுறைகள் 272. | எடுக்கப்படும் வரை, அவற்றின் வரிசை இலக்கங்களின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட வேண்டும், மேலும் ஆவணங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் அவற்றை அங்கீகரிக்கப்படாத நபர்களிடமிருந்து பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். இருப்பினும், இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பிடமிருந்து பெறப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான படிவங்கள் இம் முறையில் தயாரிக்கப்படவில்லை.. |
| (ஆ) 28 ஆகஸ்ட் 2020 திகதியப் பொது நிதிச் சுற்றறிக்கை இல 01/2020 | |
| (i) பந்தி 9 (b) | அலுவலகத்தின் பல பதவிநிலை உத்தியோகத்தர்கள் 2,377,480 முன்பணத்தினை ரூபா. 100,000 க்கும் அதிகமான இடைக்காலக் கட்டுப்பணமாக 08 தடவைகள் பெற்றுள்ளனர். |
| (ii) பிரிவு 11.1 மற்றும் நிதி ஒழுங்குமுறைகள் 756 (6) | பொருட்கள் கணக்கெடுப்புப் பணிகள் 31 மார்ச் , 2025 க்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டு, கணக்காளர் நாயகத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (இ) 2021 நவம்பர் 16 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்களின் வழிகாட்டுதல்கள் குறியீட்டு சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் பந்தி 2.3 இன் அட்டவணை 01 இன் பந்தி 3 | பிரதான பாதீட்டு ஆவணத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய முன்னறிவிக்கப்பட்ட வருமான அறிக்கை, முன்னறிவிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை மற்றும் முன்னறிவிக்கப்பட்ட பணப்புழக்க அறிக்கை என்பன, 2024 ஆம் |

| | |
|---|---|
| | ஆண்டிற்கான பாதீட்டு ஆவணத்தில் உள்ளடக்கப்படவில்லை. |
| (ஈ) கொள்முதல் வழிகாட்டுதற் குறியீட்டின் பந்தி 4.2.1 | 03 வருட காலத்திற்கு எதிர்பார்க்கப்படும் கொள்முதல் நடவடிக்கைகள் உள்ளடங்கலான, கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், அத்தகைய திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2008 பிப்ரவரி 06 மற்றும் 2018 பிப்ரவரி 24 திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம். 05/2008 மற்றும் 05/2008 (i) | பொதுத்துறையின் செயல்பாடுகளை மிகவும் செயற்றிறன் மிக்கதாக்குவதற்காகவும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தவும் ஒவ்வொரு அரச நிறுவனமும் பிரஜைகள்/வாடிக்கையாளர் சாசனத்தை அறிமுகப்படுத்தியித்தல் வேண்டும் ஆனால், இவ் அலுவலகம் பிரஜைகள்/வாடிக்கையாளர் சாசனத்தை அறிமுகப்படுத்தவில்லை. |
| (ஊ) மார்ச் 17, 2016 திகதியிடப்பட்ட தேசியப் பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் பந்தி 06 மற்றும் ஜூலை 16, 2018 திகதியிடப்பட்ட தேசியப் பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 03/2018 இன் பந்திகள் 05 (c) ii(f) | செயல்பாட்டு குத்தகையின் கீழ் கையகப்படுத்தப்பட்ட இந்த வாகனம், வாகனத்தை வழங்கிய நிறுவனத்திற்கும் இழப்பீட்டு அலுவலகத்திற்கும் இடையே எந்த எழுத்துப்பூர்வ ஒப்பந்தமும் கையெழுத்திடப்படாமல், அக்டோபர் 05, 2023 முதல் டிசம்பர் 31, 2024 வரை பயன்படுத்தப்பட்டது. |
| (எ) 2022 அக்டோபர் 21 திகதியிட்ட தேசிய வரவு செலவுத்திட்டச் சுற்றறிக்கை இலக்கம். 07/2022 | இயக்கக் குத்தகையின் அடிப்படையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் ஒப்பந்த விலையை நீட்டிப்பதற்குக் குத்தகைதாரர்கள் |

ஒப்புக்கொள்ளவில்லை எனில், பொதுக் கொள்முதற் செயல்முறையைப் பின்பற்றி போட்டி ஏலம் மூலம் குத்தகைதாரர்களைத் தெரிவுசெய்தல் வேண்டும், ஆனால் அதற்கு இணங்குவதற்குப் பதிலாக, 2024 அக்டோபர் 01 தொடக்கம் 2025 அக்டோபர் 31 வரை ரூபா. 225,000 (VAT தவிர்த்து) மாத வாடகையிலும், 2024 நவம்பர் 01 தொடக்கம் 2025 அக்டோபர் 31 வரை ரூபா. 265,000 (VAT தவிர்த்து) மாத வாடகையிலும், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தில் செலுத்தப்பட்ட முந்தைய மாத வாடகையை விட ரூபா. 25,000 அதிகப்படியான விலையிலும் வாகனத்தைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மேலும், 2023 02 அக்டோபர் முதல் 01 அக்டோபர் 2024 வரையிலான கால நீட்டிப்புத் தொடர்பான கொள்முதல் செயல்முறையின் முக்கிய கொள்முதல் ஆவணங்கள், அதாவது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கைகள், ஏலத் திறப்புக் குழு அறிக்கைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள் தொடர்பான அசல் ஏல ஆவணங்கள் ஆகியவை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் இக் கொள்முதலில் ஏலங்கள் மின்னணு முறையில் (மின்னஞ்சல் மூலம்) பெறப்பட்டன, அவை கொள்முதல் வழிகாட்டுதல்களின் குறியீட்டின் பந்தி 9.8(d) க்கு இணங்கவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(g) இன் படி, அலுவலகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு முரணான வகையில் அலுவலகம் செயல்பட்டுள்ளது.

**2.3** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(h) இன் கீழ் அவசியமான தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி, அலுவலகத்தின் வளங்கள் கால வரம்புகளுக்குள் சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்படவும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.

### 2.4 ஏனைய விடயங்கள்

(அ) 31 டிசம்பர் , 2024 நிலவரப்படி, இறப்புகள் மற்றும் காயங்கள் தொடர்பான 3,495 கோவைகளுக்கு ரூபா. 698,860,000 இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் 31 டிசம்பர் , 2024 நிலவரப்படி, இழப்பீட்டு நடைமுறைகளின் கீழ் 33 கோவைகளுக்கு ரூபா. 6,185,000 இழப்பீடு வழங்கப்பட இருந்தது. இவ் இழப்பீட்டுத் தொகை தொடர்பான நேரப் பகுப்பாய்வின்படி, 1 முதல் 5 ஆண்டுகளுக்கு இடையில் 23 கோவைகளும், 5 முதல் 10 ஆண்டுகளுக்கு இடையில் 10 கோவைகளும் காணப்பட்டதால், இழப்பீடு வழங்குவதில் குறிப்பிடத்தக்க தாமதம் ஏற்பட்டது.

(ஆ) 31 டிசம்பர் , 2024 நிலவரப்படி, சொத்தழிவு நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் 7,459 கோவைகளுக்கு ரூபா. 924,184,606 சொத்தழிவு நட்டஈடானது வழங்கப்பட்டுள்ளது, மேலும் அதே நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் பொதுச் சொத்துக்களுக்கு செலுத்த வேண்டிய 3,060 கோவைகள் நிலுவையில் உள்ளன. இக் கோவைகள் அனைத்தும் 10 ஆண்டுகளுக்கும் மேலானவை.

2022 வன்முறைச் சம்பவத்தில் (அரகல) சேதமடைந்த சொத்துக்களுக்கான வழங்கப்பட்ட நட்டஈடுகள் தொடர்பில் ஆராயும் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(i) 06 டிசம்பர் , 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இல: CP/22/1939/601-008-1 இற்கு இணங்க, ஆறு நிபுணர்களைக் கொண்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் புதிய மதிப்பீடுகளை நடத்துமாறு அரசாங்கத்தின் தலைமை மதிப்பீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டது. அதற்கமைய, முதல் மதிப்பீடுகளுடன் தொடர்புடைய சொத்துக்களின் பெறுமதியினை மீள்மதிப்பீடு செய்யுமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் ஆரம்ப மதிப்பீடு மற்றும் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புகள் 10 சதவீதம் தொடக்கம் 6,549 சதவீதம் வரை 39 சந்தர்ப்பங்களில் மாறுபட்டுள்ளன.

(ii) 09 மே , 2022 அன்று இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டபடி, அரகலவிற்கான நட்டஈட்டுச் செயல்பாட்டில், வியாபார வளாகங்களுக்கான நட்டஈட்டினை வழங்குவதற்கான மதிப்பீட்டு அளவுகோல்களாகச் சிறு வியாபாரங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத சிறு வியாபாரங்கள் காணப்படுகின்றன. 2024 ஆம் ஆண்டில், இழப்பீட்டு அலுவலகம் 14 வியாபார

வளாகங்களுக்கு ரூபா. 12,416,190 நட்டஈட்டினை வழங்கியது, இது ரூபா. 77,215 முதல் ரூபா. 5,134,350 வரை, சிறிய அளவிலான வியாபாரங்கள் எனும் வரைவிலக்கணத்தினையோ அல்லது அளவு ரீதியாக அடையாளம் காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமலும் வழங்கப்பட்டது. இதில், 02 தனியார் நிறுவனங்களுக்கு ரூபா. 2,239,450, 05 தனிப்பட்ட வியாபாரங்களுக்கு ரூபா. 2,729,665, மற்றும் கட்டுமான நடவடிக்கையில் காணப்பட்ட ஒரு உணவகத்தின் வளாகத்திற்கு ரூபா. 5,134,350 வழங்கப்பட்டது.

(iii) 2022 வன்முறைச் சம்பவத்தின் போது சொத்துக்கள் சேதமடைந்த தரப்பினருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் பட்டியலினை ஆய்வு செய்தபோது, முதல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு மதிப்புகளுக்கு அமைய 03 நட்டஈட்டுக் கோரிக்கைகளுக்கு பணம் செலுத்தப்பட்டதாகக் கண்டறியப்பட்டது, இதன் பெறுமதி ரூபா. 15,990,120 ஆகும், மேலும் சேதமடைந்த தரப்பினரின் பெயரில் உள்ள கோவைகளின் கீழ் 09 நபர்களுக்கு ரூபா. 75,717,935 செலுத்தப்பட்டுள்ளது. மேலும், சேதமடைந்த சொத்துக்களுக்கான 19 நட்டஈட்டுக் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது மதிப்பீடுகள் 25 சதவீதம் மற்றும் 6,545 சதவீதம் வரை அதிகரித்துள்ளன, மேலும் இவ் இரண்டாவது மதிப்பீட்டு மதிப்பு அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் செலுத்தப்பட்டுள்ளது. இந்த சொத்துக்களின் முதல் மதிப்பீட்டு மதிப்புகளின் மொத்தம் ரூபா. 256,664,300 மற்றும் இரண்டாவது மதிப்பீட்டு மதிப்புகளின் மொத்தம் ரூபா. 381,931,000 ஆகும், எனவே முதல் மதிப்பீட்டை விட இரண்டாவது மதிப்பீட்டில் ரூபா. 125,266,700 அதிகமாக செலுத்தப்பட்டது.

(iv) சேதமடைந்த சொத்துக்களுக்கு மூன்றாவது மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டது, மேலும் இரண்டாவது மதிப்பீட்டை விட 25 சதவீதம் அதிகப் பெறுமதியில் மூன்றாவது மதிப்பீடு செய்யப்பட்டு அமைச்சரவையின் ஒப்புதலின் கீழ் பணம் செலுத்தப்பட்ட 02 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அந்த 02 நிகழ்வுகளுடன், இரண்டாவது மதிப்பீட்டு மதிப்புகளின் மொத்தம் ரூபா. 3,720,300 மற்றும் மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புகளின் மொத்தம் ரூபா. 9,406,500 செலுத்தப்பட்டது. இதில் ரூபா. 5,686,200 இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புகளை விட அதிகமாக செலுத்தப்பட்டது.

(v) 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் இறந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் 6 இழப்பீட்டு கோப்புகளுக்கு டிசம்பர் 31, 2024 ஆம் தேதி வரை 30,000,000 செலுத்த வேண்டியுள்ளது. மேலும், அந்த சம்பவத்தில் சேதமடைந்த சொத்துக்களுக்கான இழப்பீட்டு முறையின் கீழ், முழுமையடையாத கோப்புகள் மற்றும் 128 அசையா சொத்துக்கள் மற்றும்

453 அசையும் சொத்துக்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் இல்லாததால் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை குறித்து மதிப்பீடு செய்யப்படவில்லை.

(இ) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்கான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தாலும், பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கும் போது புதுப்பிக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் நட்டஈட்டுக் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக செயல்முறை முறையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. டிசம்பர் 31, 2024 நிலவரப்படி, பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட காசோலைகளில் ரூ. 38,922,823 மதிப்புள்ள 292 காசோலைகளை தவறான தகவல் காரணமாக வங்கி ரத்து செய்துள்ளது. இந்த ரத்து செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான நட்டஈட்டுத் தொகைகளில், ரூபா. 35,164,860 அதே பயனாளிகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது, மேலும் இதில், காத்திருப்புப் பட்டியலில் உள்ள மீதமுள்ள 36 பயனாளிகளுக்கு ரூபா. 7,312,963 வழங்கப்பட்டது. அதன்படி, புதுப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நட்டஈட்டுத் தொகை செலுத்தும் செயல்முறை மேற்கொள்ளப்படாததால் நட்டஈட்டுத் தொகை செலுத்தும் செயல்முறையின் செயல்திறன் குறைவாகக் காணப்பட்டது.

(ஈ) நட்டஈட்டுத் தொகை செலுத்தும் முறையின் மாதிரி ஆய்வின் போது, மூன்று நபர்களுக்கு கூடுதலாக ரூபா. 600,000 வழங்கப்பட்டமை புலப்பட்டது. முதலாவது தடைவ நட்டஈடானது குறித்த நபருக்கு இறப்பு அல்லது காயங்களுக்காக வழங்கப்பட்டது, இரண்டாவது தடைவ நட்டஈடானது காணாமல் போனமைக்காக வழங்கப்பட்டது.

(உ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் 2024 வரவு செலவுத் திட்டத்தில் இருந்து, ஏனைய இழப்பீட்டு மானியங்களின் கீழ் திட்டமிடப்பட்ட 4 திட்டங்களுக்கு மொத்தம் ரூபா. 17 மில்லியன் ஒதுக்கப்பட்டது, மேலும் அவற்றின் முன்னேற்றத்தை ஆராயும்போது, ஒதுக்கப்பட்ட நிதியில் 73 சதவீதம் பயன்படுத்தப்படவில்லை எனப் புலப்படுகிறது.

(ஊ) இழப்பீடுகளுக்கான அலுவலகதினால் தயாரிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டத்தின்படி, நட்டஈட்டுத் தொகை செலுத்தும் செயல்முறைக்காக ரூபா. 2,483 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும் இது தொடர்பாக, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி முன்னேற்ற ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2024 ஆம் ஆண்டில், இறப்புகள், காயங்கள் மற்றும் காணாமல் போனவர்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவிற்கு மேலதிகமாக ரூபா. 4.26 மில்லியன் அல்லது 85 சதவீதம் செலவிடப்பட்டது.

(ii) காணாமல் போனவர்களுக்கான நட்டஈட்டினை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 1,000 மில்லியனில், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா. 310 மில்லியன் பயன்படுத்தப்படவில்லை, இது ஒதுக்கப்பட்ட தொகையில் 31 சதவீதமாகும்.

(iii) 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கான நட்டஈட்டிற்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா. 600 மில்லியனில், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா. 227 மில்லியன் பயன்படுத்தப்படவில்லை, இது ஒதுக்கப்பட்ட தொகையில் 38 சதவீதமாகும்.

(iv) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, சொத்தழிவு நட்டஈட்டின் கீழ் அரச அதிகாரிகளுக்கான நட்டஈட்டுத் திட்டத்தின் மூலம் ரூபா. 10,763,000 செலுத்தப்பட்டுள்ளது, மேலும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீடு எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

எ) நிறுவனத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 2,588 மில்லியனாக இருந்தபோதிலும், உண்மையான செலவு ரூபா. 2,145.14 மில்லியனாக இருந்தது. வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட் செலவினங்களுக்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் 52 செலவு விடயங்களில் 29 விடயங்களில் 20 சதவீதம் முதல் 757 சதவீதம் வரையிலான தொகையின் வேறுபட்டுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாக, வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகள் யதார்த்தமாகச் சரிசெய்யப்பட்டு கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்படவில்லை எனப் புலப்படுகிறது. குறிப்பாக, பணிக்கொடைக் கொடுப்பனவு மற்றும் கட்டிட வாடகைச் செலவுகள் என்பன வரவு செலவுத் திட்டச் செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையே 758 சதவீதம் முதல் 543 சதவீதம் வரை வேறுபட்டுக் காணப்படுகின்றன.

(i) டிசம்பர் 31, 2024 நிலவரப்படி, ஏப்ரல் 28, 2023 அன்று செயல்படுத்தப்பட்ட இரண்டாவது கணனித் தரவுத்தள அமைப்பில், காணாமல் போனோருக்கான நட்டஈட்டுத் திட்டத்தைத் தவிர வேறு எந்த இழப்பீட்டுத் திட்டமும் சேர்க்கப்படவில்லை, மேலும் இரண்டாவது கணனித் தரவுத்தள அமைப்பு நிறுவப்பட்டதிலிருந்து நட்டஈட்டு நடைமுறைகள் தொடர்பான தரவானது முதலாவது

கணனித் தரவுத்தள அமைப்பிலிருந்து இரண்டாவது கனினித் தரவுத்தள அமைப்பிற்கு இடப்பெயர்வு (தரவு இடப்பெயர்வு) செய்யப்படவில்லை.

(ஏ) ஏப்ரல் 28, 2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா. 10,819,625 மதிப்புள்ள கணனித் தரவுத்தள அமைப்பு, இடப்பெர்வுக்கான சர்வதேச அமைப்பிலிருந்து (IOM) மானியமாகப் பெறப்பட்டது, மேலும் இச் சொத்தின் மதிப்பைச் சரிபார்ப்பதற்கு முறையான ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இக் கணனித் தரவுத்தள அமைப்பை வழங்கிய நிறுவனத்திற்கும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கும் இடையே இரு தரப்பினரும் செய்து கொண்ட ஒப்பந்தம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததால், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் புதிய தரவுத்தள அமைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு, மாற்றங்கள் தொடர்பாக் கணக்காய்விற்குட்படுத்தி சரிபார்க்கப்படவில்லை.

(ஐ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் முதல் கணனித் தரவுத்தள அமைப்பு 2016 செப்டம்பர் 16 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் போதிலும், அதன் பின்னர், அலுவலகத்தின் அத்தியாவசியப் பதவியான அங்கீகரிக்கப்பட்ட பதவியில் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் காணப்படவில்லை. இழப்பீடுகளுக்கான அலுவலகம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் ஜூலை 12 ஆம் தேதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் 01 தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியை அங்கீகரித்திருந்தாலும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதிக்குள் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படவில்லை.

(ஒ) 31 டிசம்பர் , 2024 நிலவரப்படி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் தொகையானது 76 ஆக இருந்தபோதிலும், குறிப்பிட்ட திகதியில் 08 பதவிகளுக்கான 28 ஊழியர் வெற்றிடமானது காணப்பட்டது.

(ஓ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 40 (1) இன் படி, உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அலுவலகத்தின் உறுப்பினர் சபையினால் நியமிக்கப்பட்ட அதன் சொந்த உளளகதக் கணக்காய்வாளரினை அலுவலகம் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது, ஆனால் 29 ஆகஸ்ட் 2024 தொடக்கம் அலுவலகத்தின் ஊழியர்களுக்கான எந்த ஒரு உள்ளகக் கணக்காய்வாளரும் நியமிக்கப்படவில்லை.

Sgd. illegibly

ஜி.எச்.டி. தர்மபால

கணக்காய்வாளர் நாயகம் (பதில்)

கணக்காய்வாளர் நாயகம்,
தேசியக் கணக்காய்வு அலுவலகம்,
இல. 306, பொல்துவ வீதி.
பத்தரமுல்லை.

**<u>31 டிசம்பர் , 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் நிதி அறிக்கைகள் மற்றும் பிற சட்ட ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.</u>**

30 மே , 2025 திகதியிடப்பட்ட தங்களது JLO/C/B/REP/FA/2024 இலக்கக் கடிதத்தில் கோரப்பட்ட, கணக்காய்வு விசாரணைகளுக்கான பதில்களை உங்கள் கவனத்திற்கு இதன் மூலம் சமர்ப்பிக்கின்றேன்.

ஜெ. கிருஷ்ணமூர்த்தி
பணிப்பாளர் நாயகம்

1. **நிதி அறிக்கை**

1.1. **தகுதிவாய்ந்த அபிப்பிராயங்கள்**

1.2. **தகுதிவாய்ந்த அபிப்பிராயங்களுக்கான அடிப்படைகள்**

அ) மேற்கொள்ளப்பட் அவதானிப்புகள் துல்லியமானவை. , 2024 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை வழங்குவதில் ஏற்பட்ட இப் பிழையைச் சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகளை 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது மேற்கொள்வேன்.

ஆ) மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் துல்லியமானவை. நிறுவனத்திற்குச் சொந்தமான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை நான் மீள்மதிப்பீடு செய்வேன், அச் செலவினத்தின் அடிப்படையில் தேய்மானத்தைக் கணக்கிடுவேன், மேலும் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளில் அதனைத் துல்லியமாக வெளியிடுவேன்.

இ) அவதானிப்புகள் துல்லியமானவை. ஏற்பட்ட கணக்கியல் பிழைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய நான் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(ஈ) அவதானிப்புகள் துல்லியமானவை. ஏற்பட்ட கணக்கியல் பிழைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய நான் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

உ) அவதானிப்புகள் துல்லியமானவை. 2024 ஆம் ஆண்டிற்கான ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட செலவினங்களை நான் குறிப்பிட்டுள்ளேன், இது 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் நிதி செயல்திறன் அறிக்கையை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் சரிசெய்யப்படும். எதிர்காலத்தில் இதுபோன்ற மானியங்களைக் கணக்கிடும்போது, தங்களது அவதானிப்புகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, பொருத்தமான நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படும்.

2. **பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறையில் வேண்டப்படுகின்றவை குறித்த அறிக்கை.**

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(f) இல் வேண்டப்படுகின்றவற்றிற்கு இணங்க, பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, அலுவலகத்தினை வழிநடத்தும் குழுவினால் வழங்கப்பட்ட சில தொடர்புடைய எழுதப்பட்ட சட்டங்கள் அல்லது பிற பொதுவான அல்லது சிறப்பு உத்தரவுகளுக்கு இணங்குவதற்குத் தவறியுள்ளது.

**அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குமுறைகளின் பந்தி 272 (1).**

அவதானிப்புகள் துல்லியமானவை. எதிர்காலத்தில் பணம் செலுத்துவதற்கான அதனுடன் தொடர்புடைய அனைத்துப் படிவங்களையும் முறையாகத் தயாரித்து, நிதி ஒழுங்குமுறை 272 (1) இன் படி பாதுகாப்பாகப் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்வேன்.

**ஆ) 28 ஆகஸ்ட் 2020 திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இல. 01/2020**

**i. பந்தி 9 (b)**

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இழப்பீடுகளை வழங்க, இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இழப்பீடுகள் 8 கொள்கைகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. இவ் அலுவலகம் நிதி சார் நிவாரணம், கூட்டு இழப்பீடுகளின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டிற்கான ஆதரவு மற்றும் உளவியல் ரீதியான ஆதரவை வழங்க வேண்டும். இத் திட்டங்கள் அனைத்தும் கொழும்புக்கு வெளியே வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் பாதிக்கப்பட்ட விழிம்புநிலைப்படுத்தப்பட்ட சமூகக் குழுக்களுக்கான இழப்பீடுகளாகும்.

கூட்டு இழப்பீட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வசதிகளுக்காக - எழுதுபொருட்கள், பயிற்சி உபகரணங்கள், வள நபர்கள் மற்றும் ஊழியர்களுக்கான உணவு மற்றும் தங்குமிடம் போன்றவற்றிற்காக ஏற்படும் செலவுகள் இடைக்காலக் கட்டுப்பணத் தொகை மூலம் ஈடுசெய்யப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில், இக் கூட்டு இழப்பீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான செலவு ரூபா. 100,000.00 இனைத் தாண்டியுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, ரூபா. 100,000.00 என்கின்ற வரையறுக்கப்பட்ட தொகையினுள் இதுபோன்ற திட்டங்களைச் செயற்படுத்துவது சாத்தியமானதாக அமையாது. எரிபொருள் விலை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, ரூபா. 100,000.00 இனை மீண்டும் மீண்டும் முன்பணமாகப் பெற்றுத் தனிப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதும் நடைமுறைக்கு மாறானதாகும்.

மேலும், விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா. 2,377,480.00 தொகையானது, யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய், அம்பாறை, மட்டக்களப்பு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, நாநாட்டான் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட 06 வாழ்வாதாரத் திட்டங்களுக்காகவும், 2024 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில் நடத்தப்பட்ட இரண்டு திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும் 08 தனித்தனி சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட மொத்த முன்பண நிதியைக் குறிக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பணத் தொகையை அதிகரிக்குமாறு திறைசேரிக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**ii. பிரிவு 11.1 மற்றும் நிதி ஒழுங்குமுறை 756 (6)**

அவதானிப்பு துல்லியமானது. 2024 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பானது நிறைவடைந்துள்ளது, மேலும் அறிக்கையானது அமைச்சின் செயலாளர் மற்றும் கணக்காளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**இ) 16 நவம்பர் , 2021 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்களின் வழிகாட்டுதல்கள் குறியீடு சுற்றறிக்கை இலக்கம். 01/2021 இன் பந்தி 2.3 இன் அட்டவணை 1 இன் பந்தி 3.**

அவதானிப்புத் துல்லியமானது. இழப்பீடுகளுக்கான அலுவலகம் நீங்கள் குறிப்பிட்டபடி நடவடிக்கை எடுக்கும், மேலும் 2025 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட ஆவணத்துடன் முன்னறிவிக்கப்பட்ட வருமான அறிக்கை, நிதி நிலை அறிக்கை மற்றும் பணப்புழக்க அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிப்பதை நான் உறுதி செய்வேன்.

**(ஈ) கொள்முதல் வழிகாட்டுதல்களின் குறியீட்டின் பந்தி 4.2.1**

அவதானிப்பு துல்லியமானது. எதிர்வரும் 03 ஆண்டுகளை உள்ளடக்கிய ஒரு கொள்முதல் திட்டத்தை வகுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**(உ) 06 பிப்ரவரி, 2008 மற்றும் 24 பிப்ரவரி, 2018 திகதியிடப்பட் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் இலக்கம். 05/2008 மற்றும் 05/2008 (i)**

இந்த நிறுவனத்திற்கான பிரஜைகள்/சேவைபெறுனர் சாசனம் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை. இவ் வருடத்திற்குள் பிரஜைகள்/சேவைபெறுனர் சாசனத்தினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்பபடும்.

**(ஊ) 17 மார்ச் , 2016 திகதியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம். 01/2016 இன் பந்தி 06 மற்றும் 16 ஜுலை , 2018 திகதியிடப்பட்ட வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம். 03/2018 இன் பந்திகள் 05 (c) ii(f)**

கவனிப்பு துல்லியமானது. செயற்பாட்டுக் குத்தகை நிறுவனத்துடன் குறித்த காலத்திற்கு எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் கையெழுத்திட நாங்கள் தவறிவிட்டோம். இத் தவறு மீண்டும் நிகழாமல் இருக்க நடவடிக்கை எடுப்போம்.

**(எ) 21 அக்டோபர், 2022 திகதியிடப்பட் தேசிய வரவுசெலவுத் திட்டச் சுற்றறிக்கை. 07/2022**

விசாரணையில் கூறப்பட்டபடி, எங்கள் நிறுவனத்திற்கும் செயற்பாட்டுக் குத்தகை நிறுவனமான ராஜகிரிய டுவர்ஸ் இற்கும் இடையே WP-CAW-0173 இலக்கத்தினையுடைய வாகனத்தின் விலை தொடர்பான ஆவணங்கள் பரிமாற்றம் செய்யப்பட்ட போதிலும், குறித்த காலகட்டத்தில் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை, மேலும் முந்தைய விலையான ரூபா. 225,000.00 (VAT தவிர்த்து) மட்டுமே 01 அக்டோபர், 2024 முதல் 31 டிசம்பர், 2024 வரை செலுத்தப்பட்டது.

மேலும், ஏற்பட்ட குறைபாடுகளைக் கண்டறிந்து சரிசெய்வதன் மூலம், 01 ஜனவரி, 2025 முதல் கொள்முதல் செயல்முறைக்கு அமைய ஒரு புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(g) இன் கீழ் வேண்டப்பட்டுள்ளபடி, அலுவலகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு முரணான வகையில் அலுவலகம் செயல்பட்டுள்ளது.**

அலுவலகத்தின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனைத் தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ர) இன் கீழ் வேண்டப்படும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி, அலுவலகத்தின் வளங்கள் கால வரம்புகளுக்குள் சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்படவும் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை.**

அலுவலகத்தின் வளங்கள், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள், தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகளின்படி, செலவு குறைந்த, திறமையான மற்றும் பயனுள்ள முறையில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஏனைய விடயங்கள்**

(அ) அவதானிப்பு துல்லியமானது.

பணம் செலுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் முழுமையடையாததால், 31 டிசம்பர், 2024 நிலவரப்படி, பொது மக்களுக்கான சொத்தழிவு - இறப்புகள் மற்றும் காயங்கள் - தொடர்பான 33 கோவைகள் நிறுவனத்திடம் இருந்தன. தற்போதைய நிலவரப்படி, தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில், இவ் ஆண்டில் இவற்றில் 20 கோவைகளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் 13 கோவைகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

(ஆ) அவதானிப்பு துல்லியமானது.

அந்த 3,060 கோவைகளில், 31 டிசம்பர் , 2024 நிலவரப்படி, 2,425 பொது மக்களுக்கான நட்டஈட்டுக் கோவைகள், 553 வழிபாட்டுத் தலங்களுக்கான நட்டஈட்டுக் கோவைகள், மற்றும் 82 அரச ஊழியர்களின் சொத்தளிவு நட்டஈட்டுக் கோவைகள் என்பன காணப்பட்டன.

தற்போதைய நிலவரப்படி, ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக, இவ் ஆண்டு பொது மக்களுக்கான சொத்தழிவு நட்டஈட்டுக் கோவைகளில் 1,041 கோவைகளுக்குக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது. மேலும், வழிபாட்டுத் தலங்களுக்கான நட்டஈட்டுகான கோவைகளுக்கான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையினால் ஏற்பட்ட சேதத்தின் சரியான மதிப்பைக் கண்டறிய முடியாமல் உள்ளமையினால், அக் கோவைகளுக்கு வழங்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையினை மதிப்பிட முடியாமல் உள்ள நியையில் இக் கோவைகள் மூடப்பட்டுள்ளன.

பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம். 49/.89 இன் கீழ், அரச ஊழியர்களின் சொத்தழிவுக்கான நட்டஈட்டுக் கோவைகளுக்கான கொடுப்பனவினை வழங்குவதற்கு இவசியமான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாமையினால், 82 கோவைகள் நிறுவனத்திடம் உள்ளன. அக் கோவைகளுக்கான தகவல்கள் பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்டுள்ளன, ஆனால் அவற்றிற்கான எவ்விதப் பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

(இ)

i. இந்தக் கருத்துடன் நான் உடன்படுகிறேன், ஆனால் இவ் மதிப்பீட்டு அறிக்கைகளின் மதிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் இழப்பீடு அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், 2022 வன்முறைச் சம்பவத்தில் சேதமடைந்த சொத்துக்களுக்கு எங்கள் நிறுவனம் அரச மதிப்பீட்டாளர் வழங்கிய மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் மாத்திரமே இழப்பீட்டினை வழங்கியுள்ளது. சேதமடைந்த சொத்துக்களின் முதல், இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டிற்குப் பின்னர் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் மாவட்டச் செயலாளரால் எங்கள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன என்பதனையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ii. நான் இவ் அவதானிப்புடன் உடன்படுகிறேன்.

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சட்டத்திற்கமைய, குறித்த சம்பவத்தில் சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவது இவ் அலுவலகத்தின் சட்டப்பூர்வப் பொறுப்பாகும். வீடுகளுக்கான கொடுப்பனவுகளுக்குப் பின்னர் வியாபாரத் தலங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. தேவைகளின் முன்னுரிமைக்கு ஏற்ப, வீட்டிற்கு ஏற்பட்ட சேதமானது அவசரமாக ஈடுசெய்யப்பட வேண்டிய ஒரு சொத்தாகக் கருதப்பட்டது, மேலும் கோவைகளில் உள்ள ஆவணங்களின்படி, வீட்டோடு பராமரிக்கப்பட்ட வியாபாரத் தலங்கள் (சிறிய சில்லறைக் கடைகள், சிறிய வாகனத் திருத்துமிடங்கள்) மற்றும் சிறிய அளவிலான கொங்கிரீட் வேலைத் தளங்கள், காப்பீட்டில் அடங்காத மற்றும் இதுவரை வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்காத ஏற்கனவே உள்ள வியாபாரத் தலங்களுக்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. சொத்துச் சேதங்களுக்கான இழப்பீடுகளை வழங்கும் போது, அது சிறிய அளவிலான, நடுத்தர அளவிலான, பெரிய அளவிலான, தனிப்பட்ட வியாபாரங்கள் வகைப்படுத்தப்படவில்லை, ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி அலுவலகத்தின் சபை உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட வியாபாரத் தலங்களுக்குப் பணம் செலுத்தப்பட்டது.

இருப்பினும், பெரிய அளவிலான வியாபாரத் தலங்களுக்கு, பணம் செலுத்துவதில் எழுந்த சிக்கலான சூழ்நிலைகளைத் தீர்க்க, 22.08.2024 அன்று நடைபெற்ற உறுப்பினர் சபைக் கூட்டத்தில் வியாபாரத் தலங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. அதற்கு முன், 2024 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில், (சிறிய சில்லறை விற்பனைக் கடைகள், சிறிய வாகனத் திருத்துமிடங்கள்) மற்றும் சிறிய அளவிலான கொங்க்ரீட் வேலைத் தளங்களுடன் பராமரிக்கப்பட்ட மேற்கூறிய வீடுகளுக்கும், காப்பீட்டின் கீழ் இல்லாத மற்றும் வியாபார நடவடிக்கைகளைத் தொடங்காத கட்டுமானத்தில் உள்ள வியாபாரத் தலங்களுக்குப் பணம் செலுத்தப்பட்டது.

iii. கோவையினைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான ஆவணங்கள் முழுமையாகக் காணப்படுகின்ற போது இழப்பீடு செலுத்தும் சமயத்தில் முதல் மதிப்பீடு மட்டுமே கிடைத்தால், அமைச்சரவையின் முடிவுகள் மற்றும் உறுப்பினர் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் அவ் மதிப்பீடப்பட்ட தொகை

செலுத்தப்படும், மேலும் ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முதல் மற்றும் இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கைகள் இரண்டும் கிடைக்கப்பெற்றிருந்தால், இரண்டாவது மதிப்பீட்டின் அடிப்படையில் பணம் செலுத்தப்படும். மேலும், முதல் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டு, பின்னர் இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டால், மீதமுள்ள கட்டணம் அவ் மதிப்பீட்டு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகளில் உள்ள வேறுபாட்டிற்கு அமையச் செலுத்தப்படும்.

ஒரே நபருக்குப் பல கோவைகளின் கீழ் பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதையும், அத்தகையவை ஒரே நபரின் பெயரில் பல இடங்களில் அமைந்துள்ள சொத்துக்களுக்கு பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பங்களாகக் காணப்படுகின்றன என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்கான விரிவான அறிக்கையை வழங்க, கோவைகளை ஆய்வு செய்ய வேண்டும், ஆனால் அக் கோவைகள் அனைத்தும் தற்போது ஜனாதிபதி செயலகத்தின் ஊழல் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் எங்களுக்கு கோவைகளை வழங்கியவுடன் இதற்கு விரிவான பதிலை வழங்க முடியும் என்பதனையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்க விரும்புகின்றேன்.

iv. நான் இந்தக் அவதானிப்புடன் உடன்படுகிறேன், இருப்பினும் முதல் மதிப்பீட்டிற்குப் பின்னர், பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளின் அடிப்படையில் அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் அமைச்சரவையின் ஒப்புதலுடனான இவ் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் பணம் செலுத்தினோம்.

28/11/2022 தேதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் இலக்கம். CP/22/1939/601/008-1 இற்கு அமைய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மீள்மதிப்பீட்டினை நிகழ்த்துவதற்கு அமைச்சரவையானது அங்கீகாரமளித்துள்ளது, மேலும் அதன் அடிப்படையில் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்குப் பணம் செலுத்துவதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு, மதிப்பீட்டு அறிக்கைகளில் ஏற்படும் மாறுபாட்டிற்கான காரணங்கள் குறித்து தொடர்புடைய நிறுவனங்களிடம் விசாரணை நடாத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும் என்பனையும் தயவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

v. இவ் அவதானிப்புடன் நான் உடன்படுகிறேன். 2022 வன்முறைச் சம்பவங்களின் காரணமாக இறந்த 06 நபர்களுக்கான நட்டஈட்டிற்கான 06 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன, அவ் 06 விண்ணப்பங்களில் 2 நபர்களுக்கான நட்டஈடுகள் பொது நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் பிரிவினாலும் காவல் துறையினாலும் வழங்கப்பட்டுள்ளன. கௌரவ நீதிமன்றத்தில் மீதமுள்ள நான்கு நபர்களுக்கான வழக்குகள் நிலுவையில் இருப்பதனால், குறித்த விண்ணப்பங்களுக்கான ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. இதன் காரணமாக மீதமுள்ள 04 நபர்களுக்கான நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படவில்லை.

சேதமடைந்த அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கான நட்டஈட்டினை வழங்குவதற்கான அடிப்படையான ஆவணமாக அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற மதிப்பீட்டு அறிக்கையாகும். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கோவைகளிளே மதிப்பீட்டு அறிக்கையினைக் கொண்டுள்ளன. பெரும்பாலான கோவைகளில் மதிப்பீட்டு அறிக்கைகள் காணப்படாத காரணத்தினால் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையினை மதிப்பிடுவது என்பது சாத்தியமற்றதொரு விடயமாகவுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

(ஈ).

(i) நான் இவ் அவதானிப்புடன் இணங்கவில்லை.

செப்டம்பர் 22, 2022 எனத் தேதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் PS/CM/PCA/61/2022 இன் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று முன்மொழிவுகளில், "மதிப்பீட்டுத் திணைக்களத்தினால்

தயாரிக்கப்பட்ட புதிய மதிப்பீடுகளின் அடிப்படையில் முற்பணம்/மொத்தத் தொகை என்பவற்றினைச் செலுத்துதல் தொடர்பாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தினை வழிநடத்துதல்" என்பது மூன்றாவது முன்மொழிவாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏனைய முன்மொழிவுகள் உள்ளடங்கலான மேற்கூறிய முன்மொழிவுக்கான ஒப்புதலானது நவம்பர் 28, 2022 எனத் தேதியிட்ட 22/1939/601/008-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது.

இங்கு, மதிப்பீட்டு அறிக்கைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றுக்கான பொறுப்பு அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, மேலும் அம் மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் கொடுப்பனவினை வழங்கும் பொறுப்பு இழப்பீடுகளுக்கான அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, சேதமடைந்த சொத்துக்களை மதிப்பிடுவது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பணியாகும் என்பதனை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆரம்ப மதிப்பீட்டு மதிப்பு மற்றும் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புகளின் மாறுபாட்டு வரம்பு 10% முதல் 6,549% வரை இருக்கக்கூடாது, மாறாக 4% முதல் 72% வரை இருக்க வேண்டும் என்பதையும் தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஆரம்ப மதிப்பீட்டு மதிப்பு மற்றும் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புகள் 39 நிகழ்வுகளில் 10% முதல்72% வரையிலும், 46 நிகழ்வுகளில் 4% முதல் 72% வரையிலும் மாறியுள்ளன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ii) நான் இக் கருத்துடன் உடன்படுகின்றேன்

இழப்பீடுகளுக்கான அலுவலகச் சட்டத்தின்படி, தொடர்புடைய சம்பவத்தின் போது சேதமடைந்த சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்குவது இவ் அலுவலகத்தின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும். ஆகஸ்ட் 22, 2024 அன்று நடைபெற்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் முடிவுகளின்படி, நட்டஈட்டுத் தொகைக்காகப் பெறப்பட்ட நிதி குறைவாக இருப்பதனால், குடியிருப்பு வளாகங்கள், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள அசையும் சொத்துக்கள் மற்றும் வியாபார ஸ்தலங்கள் (அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள்) என்பவற்றிற்கு முறையே பணம் செலுத்துவது பொருத்தமானது என்று தீர்மானிக்கப்பட்டது. நீதியரசர் புவனேக அலுவிஹாரே - ஜனாதிபதி சட்டத்தரணி தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை பரிசீலித்த பின்னர் இம் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

இங்கு, நுண் வணிகங்களாகக் கருதப்பட்ட பெரும்பாலும் பதிவு செய்யப்படாத சிறு அளவிலான வணிகங்கள், நுண் வணிகங்களாகக் கருதப்பட்ட பெரும்பாலும் வணிக வளாகங்களாக விளக்கப்பட்டுள்ளன. விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கூறிய அனைத்து கொடுப்பனவுகளும் வணிக ஸ்தலங்கள் குறித்து உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்படுவதற்கு முன்பே மேற்கொள்ளப்பட்டன என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(iii) நான் இவ் அவதானிப்புடன் இணங்கவில்லை.

2022 சம்பவத்தில் சேதமடைந்த சொத்துக்களுக்கான நட்டஈட்டினை வழங்குவதில், முதல் மதிப்பீட்டிலும் இரண்டாவது மதிப்பீட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்ட எந்தவொரு சொத்துக்களுக்கும் நாங்கள் மீண்டும் ஒருபோதும் பணம் செலுத்தவில்லை. பொதுவாக, குறித்த கோவை பூர்த்தி செய்யப்பட்டதும், முதல் மதிப்பீடு மட்டுமே கிடைக்கப்பெற்றிருப்பின், அமைச்சரவையின் முடிவுகள் மற்றும் உறுப்பினர் சபையின் முடிவுகளுக்கிணங்க, அவ் மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக்கொண்டு பணம் செலுத்தப்படும், மேலும் ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முதல் மற்றும் இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கைகள் இரண்டும் கிடைக்கப்பெற்றிருப்பின், இரண்டாவது மதிப்பீட்டின் அடிப்படையில் பணம் செலுத்தப்படும்.

மேலும், முதல் மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் பணம் செலுத்திய பிறகு இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்பட்டால், முதல் மதிப்பீட்டு அறிக்கையிலும் இரண்டாவது மதிப்பீட்டு

அறிக்கையிலும் உள்ள மதிப்புகளுக்கு இடையிலான வேறுபாடு மட்டுமே திருப்பிச் செலுத்தப்படும். இருப்பினும், சேதமடைந்த சொத்துக்காக செய்யப்பட்ட மொத்த கொடுப்பனவுகள் ஒரு மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புக்கு சமம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், ஒரே நபர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ள சொத்துக்களுக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சந்தர்ப்பங்களில், அந்த நபரிடம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கோவைகள் இருக்கும். இச் சந்தர்ப்பத்தில் 09 பயனாளிகள் அல்ல, 08 பயனாளிகள் மட்டுமே உள்ளனர் என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சேதமடைந்த சொத்தின் மதிப்பீடு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒரு செயல்பாடு என்பதையும், ஆரம்ப மதிப்பீட்டு மதிப்புக்கும் இரண்டாவது அல்லது மூன்றாவது மதிப்பீட்டு மதிப்புக்கும் இடையிலான மாறுபாட்டு வரம்பு 10% முதல் 6,549% வரை இருக்கக்கூடாது, மாறாக 4% முதல் 72% வரை இருக்க வேண்டும் என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். முதல் மதிப்பீட்டு மதிப்பில் 25% க்கும் அதிகம் மதிப்புள்ள சேதமடைந்த சொத்துக்கு அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இரண்டாவது மதிப்பீட்டிற்கு பணம் செலுத்தப்பட்ட 19 நிகழ்வுகள் உள்ளன என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(iv) நான் இவ் அவதானிப்புடன் இணங்கவில்லை.

அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின்படி, இரண்டாவது மதிப்பீட்டு மதிப்பில் 25% ற்கும் அதிகமான மதிப்புள்ள மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கைகளுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்ட ஒரே ஒரு நிகழ்வு மாத்திரமே உள்ளது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(v) நான் இக் கருத்துடன் உடன்படுகின்றேன்

2022 வன்முறைச் சம்பவங்கள் காரணமாக இறந்த 06 பேருக்கு நட்டஈடு கோரி 06 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன, அவற்றில் இரண்டு நபர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற விவகாரப் பிரிவு மற்றும் பொலிஸ் திணைக்களத்தினால் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

மீதமுள்ள 04 நபர்கள் மீது கௌரவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதால், ஆவணத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை இதனால் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை.

சேதமடைந்த சொத்துக்களுக்கு வழங்க வேண்டிய நட்டஈட்டுத் தொகை, அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மதிப்பீட்டு அறிக்கைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கோவைகளில் மதிப்பீட்டு அறிக்கைகள் காணப்பட்டாலும், பெரும்பாலான கோவைகளில் மதிப்பீட்டு அறிக்கைகள் இல்லாமையால், செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பிடுவது சாத்தியமானதொன்றல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) அவதானிப்பு துல்லியமானது.

தொடர்புடைய கணக்காய்வு விசாரணையில் இரண்டு கொடுப்பனவுகள் ஒரே நபருக்கு செய்யப்பட்டன என்பது தெரியவந்தது, ஆனால் அந்த இரண்டு கொடுப்பனவுகளும் கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில் இரண்டு நிவாரணத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டன. முதல் கொடுப்பனவு - இழப்பீடுகளுக்கான அலுவலகமானது நிறுவப்படுவதற்கு முன்பு புனர்வாழ்வு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட இறப்பு மற்றும் காயத்திற்கான நட்ட,ட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ் விடயத்தின் நோக்கமானது ஒத்ததாக அமைவதன் காரணத்தினால், இறந்தவரின் நெருங்கிய உறவினர்கள் நட்டஈட்டினைப் பெற உரிமையுடையவர்களாகின்றனர். காணாமல் போன நபருக்கான இறப்புச் சான்றிதழுடன் நட்டஈடு கோரும் சந்தர்ப்பங்களில், மேற்கூறிய நட்டஈட்டுத் திட்டத்தின் கீழ் நட்டஈட்டுத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கொடுப்பனவு - காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் காணாமல் போனவர்களுக்கு நட்டஈடு வழங்குவது இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும்.

அதற்கமைய, காணாமல் போனோருக்கான அலுவலகமானது விசாரணைகளை மேற்கொண்டு, காணாமல் போனவரின் குடும்ப நலனுக்காக மீண்டெழுதலுக்கான உதவித்தொகையினை வழங்குவதற்கான பரிந்துரையை இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு அனுப்பியது, மேலும் அமைச்சரவையின் ஒப்புதல் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் இழப்பீட்டு கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைய அக் கொடுப்பனவானது வழங்கப்பட்டுள்ளது. எனவே, இக் கொடுப்பனவு ஒரு நபருக்கு வழங்கப்பட்ட இரட்டைக் கொடுப்பனவாக இருந்தாலும், இது 02 வெவ்வேறு கொள்கை நோக்கங்கள் மற்றும் முறைகளின் கீழ் வழங்கப்பட்ட இரண்டு கொடுப்பனவுகள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மீண்டெழுதலுக்கான கொடுப்பனவு வழங்கும் போது வழங்கப்படும் இழப்பீட்டைக் குறைப்பதன் மூலம் பணம் செலுத்துவதற்கு எந்த கொள்கை முடிவும் எடுக்கப்படவில்லை என்பதையும் நான் கவனிக்கிறேன்.

இருப்பினும், எதிரவரும் காலங்களில் இதுபோன்ற கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவேன்.

(ஊ) 2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில், வாழ்வாதார உதவித் திட்டம், உள சமூக ஆதரவுத் திட்டம், நிர்வாக ஆதரவு, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள் போன்ற பிற இழப்பீடுகளை செயல்படுத்துவதற்கான நிதியானது திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டது, மேலும் குறித்த ஆண்டில், மேற்குறிப்பிட்ட திட்டமிடப்பட்ட வாழ்வாதார உதவித்திட்டம் மற்றும் உள சமூக ஆதரவுத் திட்டம் ஆகியவற்றிற்காக வெளிநாட்டு உதவி மானியங்கள் பெறப்பட்டு செயற்படுத்தப்பட்டன. இருப்பினும், மீதமுள்ள நிதி யுத்தத்தின் போது சேதமடைந்த சொத்துக்களுக்கான நிதிசார் நிவாரணம் (நட்டஈடு) வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

(ஊ) வருடத்தின் மாதாந்தக் கட்டுப்பணத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், மனிதாபிமான மற்றும் நிறுவனத் தேவைகளின் அடிப்படையில் நட்டஈட்டுத் தொகைகளுக்காக நிதியானது ஒதுக்கப்படும். அதன் அடிப்படையில், குறித்த வருடத்தில் நிதிசார் நிவாரணங்களுக்காக (நட்டஈட்டுக் கொடுப்பனவுகள்) வழங்கப்படும் ஒதுக்கீட்டின் வரம்புகளுக்குள், நிறுவனத் தேவை மற்றும் உயர் நிர்வாகத்தின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல்வேறு இழப்பீட்டுத் திட்டங்களுக்காக நிதியானது மாற்றப்பட்டுள்ளது.

(எ) அவதானிப்புகள் துல்லியமானவை. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணிக்கொடைக் கொடுப்பனவுக்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையிலான வேறுபாட்டிற்கு 2024 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் 08 ஊழியர்கள் பணியிலிருந்து விலகியமையே முக்கிய காரணமாகும். இவர்களில் 07 ஊழியர்கள் தனிப்பட்ட காரணங்களால் 60 வயதை அடைவதற்கு முன்பே சேவையை விட்டு விலகினர்.

சேவையிலிருந்து விலகிய அதிகாரிகளுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுகள் சுற்றறிக்கையின்படி வழங்கப்பட்டன, மேலும் 07 ஊழியர்களின் சேவை விலகலானது அவர்களது தனிப்பட்ட தீர்மானங்களாகக் காணப்பட்டமையினால் மதிப்பீட்டில் அதனை வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்குவதற்கான முன்னறிவிப்பானது எமக்குக் கிடைக்கவில்லை.

செலவை மதிப்பிடுவது தொடர்பில் திறைசேரியினால் வழங்கப்பட்ட செலவின வரம்புகளின் அடிப்படையில் கட்டிட வாடகைக்கான செலவு தயாரிக்கப்பட்டமையினால், மதிப்பிடப்பட்ட

தொகையானது உண்மையான செலவை விட அளவு ரீதியில் குறைவான மதிப்பினைக் காட்டுகின்றது. அதேபோல், கட்டிட வாடகைக்கான ஆண்டு தொடர்பான ஏற்பாடுகளை நிர்வகிப்பதில் ஏற்படும் பிற கட்டாயச் செலவுகளுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். கிடைக்கக்கூடிய வரையறுக்கப்பட்ட ஏற்பாடுகளுக்குள் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும், மேலும் இந்த மாதாந்தக் கட்டிட வாடகையானது அமைச்சகத்தால் திருப்பிச் செலுத்தப்படுவதால், வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரிக்கும் சமயத்தில் மாதாந்தம் மீளச் செலுத்துவதனையும் கருத்தில் கொள்ள நடவடிக்கை எடுத்தோம்.

(ஏ) அவதானிப்புகள் துல்லியமானவை. நட்டஈட்டு நடைமுறைகள் தொடர்பான தரவினை தரவுத் தளத்தின் முதாவது அமைப்பிலிருந்து இரண்டாவது கணினி அமைப்பில் சேர்க்கும் பணி 04 மே , 2025 அன்று நிறைவடைந்துள்ளது. தரவைச் சரிபார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப் பணியினையும் இம் மாதத்திற்குள் நிறைவு செய்ய முடியும் என்பதனை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கணனித் தரவுத்தள அமைப்புகளின் பணிகளை மேற்கொள்வதில் நிறுவனத்தில் உள்ள ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாகத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(ஒ) அவதானிப்புகள் துல்லியமானவை. இத் தரவுத் தள அமைப்பு, இடப்பெர்வுக்கான சர்வதேச அமைப்பினால் (IOM) மானியமாக வழங்கப்பட்டமையினால், இடப்பெர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் ஐ டேர்மினல் டெக்னொலர்ஜிஸ் ஆகியவை தரவுத் தள அமைப்பின் பராமரிப்பு, மேம்படுத்தல்கள் மற்றும் முறிவுகளுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இருப்பினும், தரவுகள் எங்களது முதலாவது தரவுத் தள அமைப்பிலிருந்து இரண்டாவது தரவுத் தள அமைப்பிற்கு முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டவுடன், ஐ டேர்மினல் டெக்னொலர்ஜிஸ் உடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும், மேலும் இதற்கான வரைவினை நாங்கள் தற்போது கைவசம் பெற்றுள்ளோம்.

(ஓ) அவதானிப்புகள் துல்லியமானவை. தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி நிர்வாக சேவைகள் திணைக்களத்தினால் 12.07.2024 அன்று அங்கீகரிக்கப்பட்டது. இப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 01.08.2024 அன்று தயாரிக்கப்பட்டு, அமைச்சினால் நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன. இது நீதி அமைச்சின் செயலாளரால் 18.02.2025 அன்று பரிந்துரை செய்யப்பட்டு, நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

26.03.2025 அன்று, நிர்வாக சேவைகள் திணைக்களம் மீண்டும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தத்தினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது. அதற்கமைய, திருத்தப்பட்ட நடைமுறை 23.04.2025 அன்று நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஔ) அவதானிப்புகள் துல்லியமானவை. 31 டிசம்பர், 2024 நிலவரப்படி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் 8 பதவிகளில் 28 உத்தியோகத்தர்களைப் பணியமர்த்துவதற்கான ஒப்புதலைப் பெற அமைச்சு, நிர்வாக சேவைகள் திணைக்களம் மற்றும் பிரதமரின் மதிப்பாய்வுக் குழுவிடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுச் செலவினத்தினை நிர்வகித்தல், 2024

ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களை நிர்வகிக்கும் சுற்றறிக்கைகள் காரணமாக, குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஒப்புதலினைப் பெற முடியவில்லை. இருப்பினும், ஒப்புதல் கிடைத்தவுடன், 2025 ஆம் ஆண்டில் வெற்றிடங்களை நிரப்ப முடியும்.

(ஃ) அவதானிப்புகள் துல்லியமானவை. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் 28.08.2024 அன்று பதவியிலிருந்து விலகினார், மேலும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சானது 02.08.2024 அன்று வெற்றிடமாக உள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரியுள்ளது. இருப்பினும், இதுவரை அதற்கான ஒப்புதலானது எங்களுக்கு கிடைக்கவில்லை, மேலும் உரிய ஒப்புதல் கிடைத்ததன் பின்னர் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ. கிருஷ்ணமூர்த்தி
**பணிப்பாளர் நாயகம்**